உ

சிவமயம்.

காத்தியாயனரிருப்பு

ஸ்ரீ சுவர்ணாம்பிகைப்

பிள்ளைத்தமிழ்.

இஃது

ஷை காத்தியாயனரிருப்பு

ஸ்ரீமத் வடுகநாததேசிகரவர்கள்

இயற்றியது.

ஷை காத்தியாயனரிருப்பு

ம-௱-௱-ஸ்ரீ

கொ. இராமசுவாமிபிள்ளையவர்களால்

சிதம்பரம்

ஸ்ரீ குஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1908௵ செப்டம்பர்௴

உ

சிவமயம்.

கணபதிதுணை.

காத்தியாயனரிருப்பு

ஸ்ரீ சுவர்ணாம்பிகைப்பதிகம்.

காப்பு.

வெண்பா.

புண்ணியங்கூர் நாங்கை புணர்காத் தியாயனரூர்
நண்ணுமுமைக் கோர்பதிகம் நாட்டவே—கண்ணுவர்க்கன்
பூரணமு கப்பொருளை யன்பினுரைத் தார்தந்த
வாரணமு கப்பொருளை வாழ்த்து.

நூல்.

மாமேவு க்ந்தமியல் பாகியிருள் வெளிறென
வயங்குபூங் குழலுமெழுமோர்
வான்மணி பொலாதுபக விரவுமொளி காலுநன்
மணித்தோ டணிந்தகாதும்

மீமேவு மதிநுதலு மலிகருணை பொழிவிழியும்
வெண்முறுவ லுஞ்செவாயும்
விம்முமக வுண்ணவமு துதவுவெற் புறுதனமு
மின்னிடையு மன்னுமுடையுந்
தேமேவு கமலபரி புரமிலகு சரணமுந்
தெரிசித்து வாழ்த்தவிடைமேற்
சிவபரஞ் சோதியொ டெழுந்தருளி முன்வந்து
சிறியற்கு காட்சிதருவாய்
தூமேவு தடநாங்கை சேர்காத் தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணநா யகியம்மையே. (௧)

பொன்னிறைவ னெண்மலர்க் கண்மல ரடிக்கணும்
புனவேடர் கோவினலர்கண்
பொருவுத மலர்க்கணுங் கொண்டவெண்டோளருட்
புரிவொடுமொ ராடலாக
முன்னிலா தொளித்தருள நொந்தெதிரில் வந்துசு
முந்துதமிழ் வாய்மலர்ந்த [வை
முதலைவாய்ப் பிள்ளைதரு திருமுனைப் பாடியர்த
முகமொடக கமலமலர
பொன்னுதவ லாற்பொன் னளந்தநா யகியெனப்
புவனமுழு தேத்தநின்ற
புண்ணிய முதல்வியே கல்வியுஞ் செல்வநற்
புந்தியு முவந்துதருவாய்
துன்னுநந் தனநாங்கை சேர்காத் தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணநா யகியம்மையே. [௨]

தந்தியுரி போர்த்தசிவ மொடுபுணர்ந் துலகுயிர்க்
டமையெலா மளவிலாத
தரமுதவி யுங்கன்னி யாகவம ரன்னையே
தன்னைநிகர் வாரகத்தே
வந்திரு ளகற்றுசின் மயதீப மேயினே
வனபவள வாயன்னமே
வாழ்த்துமறை வடியிட்ட வமுதப் பிழம்பேபொன்
வழங்குதிரு வருண்மேகமே
சந்தமிகு பச்சிளங் கிள்ளையே துரியத்
தலத்தின்மே லமருசுடரே
தாபமு றுயிர்க்கெலா மிரங்குபே ரின்பச்
சலதியே யருள்புரிகுவாய்
சுந்தரன் றுதிநாங்கை சேர்காத் தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணாரா யகியம்மையே. [௩]

திலகுலவு நுதலமென வசரசர மெங்குநிறை
செம்மேனி வெண்ணீற்றினர்
திருவுளத் தழகொழுக வெழுதிநிதம் நோக்குறுஞ்
சித்திரமே செங்கரும்பே
யிலங்குமப ரஞ்சி பேதுவாத சாந்தத்தவிரு
மென்கணே புன்கணறவே
வேழ்பவக் கடனின்று தன்னடியர் கரையேற
வேறவிடு கழுலோடமே
யுலங்கெழு புயங்கொண்மயி டாசுரசங் காரியே
யோசங்கார ரூபவுமையே
பொப்புபர்வி லாதசிற் பரையேயற் புதவியென
திற்பவ மொழித்தாளுவாய்

துலங்குதிரு மலிநாங்கை சேர்காத் தியாயனர்
    துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
    சுவணநா யகியம்மையே. (ச)

ஙகளந் தங்குசிவ சங்கரி மனோன்மணி
    வாலையபி ராமிவராமி
மாதங்கி யோதுவே தாந்ததனி முதல்விதேர்
    மாலயற் கரியரூபி
பொங்கரவ பூடணி மகேச்சுவரி வீரிதிரி
    புரதகனி பஞ்சாட்சரி
பூதநா யகியேகி முக்கோண சட்கோண
    புரியட்ட கோணசத்தி
பங்கய முகத்திதிரி நேத்ரிமலை வல்விநாற்
    பத்துமுக் கோணமேவும்
பவானியைம் பத்தொரக் கரிசடாக் கரிபக்த
    பாலினி கிருபைசெய்குவாய்
துங்கவள மிகுநாங்கை சேர்காத் தியாயனர்
    துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
    சுவணநா யகியம்மையே. [ரு]

சுந்தரி நிரந்தரி வரந்தரு துரந்தரி
    சுமங்கலி சுலட்சணிஜயச்
சூலியென்னே னுண்மை யன்பிலே னறுமலர்
    தொடுத்தமுடி சூடிகில்லேன்
சிந்தையுன் னேனைந் தெழுத்தெணேன் வந்தியேன்
    சேவடி யருச்சினைசெயேன்
சிறிதும்நல் லறமிலே னெனநீக் கிடாதெனை நின்
    திருவருளி னாலெடுத்தே

யந்தக னுருத்துருமி வந்துதொடர் முனமுன்ற
னடியில்வெண் ணீற்றிலடியா
ரகத்துமா லயத்துமுதி ரன்புதந் தானந்த
மாயமர வருள்வையம்பா
துந்துபிகல் லெனுநாங்கை சேர்காத் தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணநா யகியம்மையே. [சு]

கண்டுரை மொழிச்சியம லச்சிசின் மயச்சிகங்
காளிச்சி கனிவாய்ச்சியுன்
கழலிணை களுக்கடிமை தொழுதுபல கான்முனங்
கழறுவிண் ணப்பமதுகேண்
மண்டுதவ மாற்றுது விம்மிப் புடைத்துமதன்
மணிமுடி பழித்துவனச
வண்முகை ஜயித்துமக மேருவை யெதிர்த்தோங்கி
மைந்தர்தஞ் சிந்தைசூறை
கொண்டுவள ரிளமுலைந லாரொடு கலந்துமயல்
கூர்ந்துழல்கி னுஞ்சார்ந்திடுன்
குலவைந் தெழுத்தென்வாய் மறவாது சிந்தைநின்
குளிர்பதஞ் செலுத்தவருள்வாய்
தொண்டர்நிறை தருநாங்கை சேர்காத் தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணநா யகியம்மையே. [எ]

அன்றரன் மறைந்தருள வந்தசுந் தரர்கொள்ள
வம்பொன் னளந்துநீதந்
தருளிபதென் வன்றெண்ட னென்றேவண் டமிழி
காவலூற் றேவளித்தே [ணுக்

யின்றென்ப ரின்முகங் காண்பதிசையென்றேதன்
னிதயந் தயங்குதலையின்
எளிமையுல கறியவோ வருளரும் பொருள்கட்டமை
யின்றியமை யாவென்டிறையி
னொன்றுண்மை தேற்றவோ வெண்ணுன் கறம்பர
னுரைப்படி வளர்க்குந்தனக்
குரிமையா விறைவர்வெகு ளாரென விசைந்தோவஃ
துண்மையை விளம்பியருள்வாய்
சொன்றிகிறை தருநாங்கை சேர்காத் தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவ்ணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணநா யகியம்மையே. [அ]

ஒன்னுரிய தந்தைதன் மருகன்கே வலன்கூத்த
னுரைசெய்மறை நெறிகடந்தோ
னெருதொழி லிலோனென வெறுத்திடா தபிதான
மோதுபொன் னுக்கொளித்தா
ரென்னவு பிலச்சையில் லாதுணே யனர்க்கிந்த
தியலுன்விதி யோவிற்பெறு
வெச்சமென் றேசுவண புரியீச ரெனமற்றே
ரிசைநாம மேன்மைகொண்டோ
வன்னமிறை கொள்ளணிய பீணயினெற் கருப்பெ
மணிவநெடுங் கமுகென்னவு [னவு
மக்கமுகு தெங்கெனவு மவைவான் பொறுக்கநடு
மரும்பெருங் கால்களெனவுந்
துன்னிவளர் வளநாங்கை சேர்காத்தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்

சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணநாயகி யம்மையே. [சு].

முந்தைமறை யாவுமுத் துங்கவல் லவியென்ன
முழுதுணர் முதல்வியுன்னை
மொழிவதுப சாரமல வுண்மையென நிகழ்வதா
மோகப்ர பஞ்சமெவையும்
வந்தமரு முண்மையிதென் சமயவா திகணெறியு
மறைமுடியு மேகடந்தே
மருவிபெங் கேனுமா யமர்பரம்பொருளாயுன்
மருங்கமைத் தாயதல்லாற்
சுந்ததமுந் தாமலா தவருமற் றவரலாற்
றுமுமாற் றுமலெவையுந்
தம்பிலொத் தாற்றொரு மையும்பெற்ற வின்பெருந்
தகைவளர் செயல்களவையாற்
சுந்தரங் கிளர்நாங்கை சேர்காத் தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணநா யகியம்மையே. (எ)

எண்ணரிய பிறவியா தினுமரிய மானுட
மெடுத்துமிரு மைக்குமுரிய
வின்பொன்று மெய்தா தியான்படும் பாடவை
யெலாமெங்கு மாகுநெடுவேற்
கண்ணிநீ யறியாத தில்லையா யினுமுனது
காதேற்கு மாறெடுத்தே
கரைந்துநிதம் வருதல்கே ளாரென விருப்பதுன்
கரைகடந் திடுகிருபைக்கோர்

வண்ணமா காததா லெண்ணிலென் பிழையெலா
மனம்பொறுத் தன்புதந்தெண்
மனோரத மெலாமாக்கி முத்திதந் தாள்வையுண்
மலர்ச்சரண் சரணகுமாற்
சுண்ணவிழ் வுறுநாங்கை சேர்காத் தியாயனர்
துலங்கிருப் பினிதார்ந்தருள்
சுவணமென விலகுமொளி தருமரிய வருணமிகு
சுவணநா யகியம்மையே. (கக)

முற்றிற்று.

உ

சிவமயம்.

காத்தியாயனரிருப்பு

ஸ்ரீ சுவர்ணாம்பிகைப் பிள்ளைத்தமிழ்.

விநாயகக்கடவுள் துதி.

கார்மேவு கவுண்மதக் கலுழிபாய்ந் திமிழிசை
க்றங்கக் கறங்குபோன் று;ககனவட் டத்தினின் றஞ்
சிறைத் தும்பியொடு களியளி முரன்றுசூழத், தா
ர்மேவு தழைசெவி புடைப்பமுகி ழிளநிலவு தவ
ழும்வெண் கோடுதிகழத், தனிவிரற் சுட்டியே கை
காட்டி யிடுமவன் றாமரைத் தாடுதிப்பாம், வார்
மேவு தனகிரிகுலுங்கமே லுத்தரிய மசையநவ மணி
கண்மிகவே, வைத்திழைத் தொளிர்கின்ற சூடகக்
கையினால் வளர்பொன் சொரிந்தளந்த, சீர்மேவு சுவ
ர்ணபுரி வல்லிபொன் மலைவல்லி தெள்ளமுத வல்
லியென்னுஞ், செம்பதும மனையகழ லம்பிகையை
வாழ்த்துமென் செந்தமிழ்க் கவிதழையவே. (க)

க-வது காப்புப் பருவம்.

திருமால்.

சீர்கொண்ட செம்பவள வல்லிபொற் கொடி
யெனச் செவ்விவாய்த் துத்தழைந்த, செக்கர்ச் சடா

மகுட முக்கட் பிரானுடன் றிகழ்கைலை யம்பொரு
ப்பி, லேர்கொண்ட மாணிக்க மிளவெயி லெறித்
திட விழைத்தவரி யாசனத்தி, லிருந்தருள் புரிந்தி
டுஞ் சுவர்ணபுரி வல்லியெனு மெழின்மயிலை யினிது
காக்க, தார்கொண்ட பச்சைப் பசுந்துழாய்ப் பட்
லைகமழ் தண்ணறுந் தேன்றுளிப்பத், தவழும்வெண்
ணிலவுபொழி சுரிமுகத் தோடிலகு சக்கிரா யுதந்த
ரித்தே, கார்கொண்ட நீலநெடு மால்வரை யதாமெ
னக் கனகமே யனையதுத்திக், கவினுமோ ராயிரங்
கணபணப் பாயலிற் கண்வளர் பசுங்கொண்டலே. [ ]

சித்திவிநாயகர்.

அண்டகோ ளகைநடு நடுங்கவட வரைகுலைந்
தசையவெண் குலகிரிவெடித், தனற்பொறி பறக்கக்
கறைச்சூட்டு மோட்டரவி னாயிரந் தலைதுடிப்பச்;
சண்டமா ருதமெனச் சீறிவரு கயமுகன் றன்னுடல்
கிழித்தெறிந்த, தறுகண்மை சிறுகவுட் டழைசெவிப்
புகர்முகத் தந்திமுக னைத்துதிப்பாம், மண்டுகடல்
சூழ்புவியில் வாடித் தவிக்கின்ற வான்பயிரி னுக்கி
ரங்கி, மழைபொழிந் திடுவதென மன்னுயிர் தமக்கெ
லாம் வறுமைவிட் டிருநாழிநெற், கொண்டுவளர்
முப்பத் திரண்டறம் வளர்த்தபூங் கொம்பைமா ணி
க்கமணியைக், குலவுபெண் ணமுதையொளிர் சுவ
ணபுரி வல்லியைக் குடிகொண்டு காக்கவென்றே. [ ]

சிவபெருமான்.

மூளரி மலருறை பிரம னொருசிர முதிர மொழு
திடக் கிள்ளுகிர்க் கீற்றனை, முழுது முணர்நவ நிதியை

யருமறை முதலே முறைதெரி வள்ளலைத் தோற்றமு
முடிவு மறிவரு மகில முதல்வனை முகிழ்வெண் ணில
வொளிர் மொய்ச்சடைக் காட்டனை, முனிவ ரயன்முத
லெவரு மரவென முனம்வல் லபமயி லைவதிகக் கூத்த
தனை, யள்வி லமரர்கள் குழுவை சிறைவிட வறு
முகனையரு ளையனைத் தேற்றமோ, டரிய மதுமலர்
நறிய புனலுட னமைய வழிபடு துய்யபொற் றாட்
டுணை, யமைதி பெறநினை பவர்த மனைதொறு மதிர
வருமொரு வெள்விடைத் தீர்த்தனை, யருமை திகழ்
திரு மலனை யளவிட வரிய பெரியபொன் னையனைப்
போற்றுதுங், களப மிர்கமத மிளகி யொழுகிய கரி
ய குழன்மிசை செம்மலர்ச் சூட்டணி, கவினும் வழு
திகண் மணியை யியன்முதிர் கவுரி யினைநிறை பொ
பகையிற் றேற்றிய, கமல நயனியை யினிய சுவை
தரு கனியை யமுதினை யெய்தனப் பேட்டையை,
கறையின் மறையவர் துதிசெய் கிளியைமெய் கலுழு
மெழின்மிகு மெல்லியைக் கூர்த்திடு, துளைவெள்
ளெயிறில கியலைப யரவுறு சுமைமன் னுலகுயிர் நை
யமுற் றாக்கியே, தொடரு மலவலி யகல வுயர்பர
சுகநன் னெறிதரு தையலைச் சாற்றரு, சுகிர்தி யி
னையின மயிலையளிமுர றுடையல் புனைமிகு செல்வி
யைச் சீர்த்தரு, தொகையின் மகிமைகொள் கருணை
பெருகிய சுவண புரியுறை வல்லியைக் காக்கவே [௫]

முருகக்கடவுள்.

௧. எண்டிசை திடுக்கிட விடிக்குர லெழுப்பிவிழி
யெரிகதுவ வெயிறி றுக்கி, யிமையவர்கள் வேந்தனைச்

சீறியெழு சூரனுட லிருகூறதாய்ப்பிளந்துத், திண்டி றல்கொ ளண்டபகி ரண்டமு தண்டமுஞ் சென்றொ ரு கணத்தின்மீளுஞ், சித்திர கலாபமயில் வெற்றிவே ன் முருகனிரு செஞ்சரணை யஞ்சலிசெய்வாம், தொ ண்டர்கலி தீர்க்குந் துரைச்சியைக் கவியாண் சுந்தரி யை யமுதைமதுரச், சுவைகனிந் தொழுகும் பசுந் தேனை யெண்ணரிய துவாதசாந் தத்தின்மேலாம், மண்டுமொளி மயமாய் நிறைந்திடு பராபரையை மன் னுபே ரின்பவெள்ள, மடைதிறந் தென்னமிகு கரு ணைபொழி சுவணபுரி வல்லியைக் காக்கவென்றே. [ ]

பிரமதேவர்.

நறைகமழ் கருங்குழற் செய்யவாய் வெண்மே னி நங்கைவளர் நாத்தலத்து, நான்முகனை வெள்ளை கின மூர்மறைக் கிழவனை நாபியம் பூவில்வந்தே, சி றையளிய தென்னத் திகழ்ந்துவளர் பொன்வணச் செல்வனைச் சிந்தைசெய்வாஞ், செவ்வரி பரந்தமைக் கண்ணியைத் தேவர்தொழு செல்வியைச் சூழி த்த, நிறையுறுந் தனிபயிற் குமரன் றனைப்பெற்ற நேரிழையை நேரிலாளை, நேசமொடு பூசைபுரி காசி லா ருள்ளத்தி னித்தியா னந்தவமுதை, மறைமுதல் வினையப்பரம னார்திருத் துணைவியை மாயனுக் கொ ருதங்கையை, வாரணி தனத்தியைச் சுவணபுரி மே விவளர் வல்லியைக் காக்கவென்றே. (௫

திருமகள்.

மருமிக்க பதுமநன் மலரிற் றுளித்திடும் மது வைக் களித்துண வலமுற் றிதழ்க்கத் வதனப் புற

றுமெ லிசையைப் பரப்பிவிண்வழியிற் றனித்தனி யுருமொய்த் தளிக்குல, முருகிற் சிவப்புறு வதரத் தலத்தினுள் பனிமுத் தினைப்பொரு நகைசற் றுதி த்திட முக்மூற் புதத்தனி யெழிலைக் கொழிக்கவ மு ரரிப் பொருட்டுறை திருவைத் துதிக்குதும், இரு மைக்கு நற்கதி தருசத்தி யுத்தமி யிதையத் திருப்ப வள் வினையைத் துரத்துவ ளிமையப் பொருப்பிறை மகண்முக் குணத்தினி லெழுமுத் திறத்தின ரினை முற் படைத்தவள், சுருதித்தனிப்பொரு ளகிலத் தினுக்குறு துணைபற்று விட்டவர் மனதுக் கினித்த வள் துகையீட் டளப்பரு கருணைப் பெருக்கெழு சுவணத் துரைச்சியை யினிதிற் புரக்கவே. (சு)

௩. மகள்.

மிடறுடைக் தின்னிசை கனிந்துவரி யளிபாடி விண்ணினின் றாதியாட, வெண்ணிலவு தவழ்நறுந் தண்ணமுத கிரணம் விரிந்திட வடர்ந்துநீண்ட, மட ன்முறுக் கவிழமது வொழுகிவிரை கமழ்வெள்ளை வள்ளவாய்க் கமலமலர்மேன், மகிழ்கூர்ந் திருந்த கலை மாதுதளி ரிணையடி வணங்கிநின் றஞ்சலிசெய் வாய், கடன்மடை திறந்தெனக் கருணைபொழி விழி கூழ் கருங்குயிலை மதுரமொழுகும், கனியிளங் குத மொழி யிளவனப் பேட்டினைக் கற்பகப் பூங்கொ மைநற், குடிலையின் முளைத்திலகு செங்கரும் பை ப்புவன கோடிகளை யீன்றசுவணக், குழவியைச் சீரா ட்டி யாருத காதலொடு குடிகொண்டு காக்கவெ ன்றே. [எ]

சத்தமாதர்கள்.

பிறைவென்ற வெழினுதலு நள்ளிருட் குடி கொண்ட பின்னற் கருங்கூந்தலும், பிள்ளைமான் விழியுமிளிர் வள்ளைவார் காதும் பிறங்குமகரக்குழை திகழ்ந், தறைகின்ற பச்சிளங் கழைபொருவு தோளிணையு மார்ந்தெழில் கொழிப்ப வாய்ந்த, வன்னமென வொளிர்கின்ற கன்னியர்களெழுவர்சீ றடிபணிந் தஞ்சலிசெய்வாந், திறல்கொண்ட பாண்டியன் செல்வக்குமாரியாய்த் தென்மதுரை நகர்புரந்துச், செங்கோல் செலுத்திக் கொடிஞ்சியந் தேர்க்கடிது செல்லவால் வளையொலிப்ப,விறல்கொண்டு வீளர்திக்குவிசயஞ்செய் திடுகுமி வில்வியபி டேகவல்லி, விளைகரும் படுசொல்லி சுவணபுரி நல்லியெனும் மெல்லியைக் காக்கவென்றே. (அ)

திருநீறு.

முரிதிரை சுருட்டிநிமிர் மகரம் புரட்டியெழு முன்னீரி னுவரிசுற்று,மூதுலகில் வேதரீள பூதமோடிரத்தசா முண்டிமுனி சண்டியூறுந், திரிவித மலத்தினொடு நோயின் குலங்களுந் தெரிசனஞ் செய்தவுடனே, திடுக்கிட்டு நெஞ்சந் துடித்தலறி யோடவொளிர் திருநீற்றை யஞ்சலிசெய்வாம், மருவிரி சுகந்தமணி திரிபுர சவுந்தரியை மதுரமிகு செஞ்சொலமுதை, மலையரையன் முன்புபுரி தவநிறையுவந்தருள்செய் வடிவுள பசுங்கிளியைவான், சொரிதுளி விரும்பிமகிழ் பயிரெனவெம் மன்னுயிர்த் தொகுதிபடு துயரநீக்குஞ், சுவணபுரி யம்பிகையி னுதன்மிசை விளங்கியுறு துணைசெய்து காக்கவென்றே. ()

மூப்பத்துமுக்கோடி தேவர்முதலினோர்.

மிக்கவிரை மலர்சொரிந் திருகர மெடுத்துச்சி
ரீதுவைத் தஞ்சலிசெய்வாம், வேதநா யகியையவளர்
சுவ்ணப்பிர தாம்பிகையை மேலான தோகை மயி
லைப், புக்கமை யிருள்குடித் திலகொளி பரப்பியெழு
புரவிபூட் டிக்க் வின்செய், புனைமணித் தேருர்ந்து
வருமிரவி யும்பெருகு புதுநிலவு பொழிம தியமுந்;
தக்கபதி னொருகோடி பலவுருத் திரகணத் தலைவ
ரும் மருத்து வரும்வேற், சண்டகோ பனுநெடிய வயி
ரவர்க ளெண்மருஞ் சாதவா கனனும் வெய்யத், திக்
குநெடு நாகமும் நவகோடி சித்தருந் திசைபால ரிரு
நால்வருந், திகழ்முனிவ ரெழுவரும் முப்பத்து முக்
கோடி தேவருங் காக்கவென்றே. [௰]

காப்புப்பருவமுற்றிற்று.

உ-வது செங்கீரைப்பருவம்.

பைங்காய்ச் செழுங்கமுகின் மிட்றிலகு நல்வி
ளம் பாளைமணம் வீசவாழைப், பழக்கு லைகனிந்து
செந் தேன்மாரி பொழியப் பலாவினீள் கனிவெ
டித்துக், கொங்கார்ந்த பொற்சுளை கனிந்துநற வொ
ழுக்க் குளிர்ந்தநிழல் வளர்சோலையுங், கோகநக வா
வியும் மேவுதிரு நாங்கைநகர் குடிதழைய வந்தவா
ழ்வே, சங்காழி மாயன்ச கோதரிபு ராதனி தராதல
மளித்தருவி சர்வமங் களகர சுமங்கலிசு கந்தநிறை

தவளமா ளிகையின்வண்டு, செங்கார மிடுமயிட் சங் காரி சிங்காரி செங்கீரை யாடியருளே, சிறையிலகு கிரணமயில் வருணமிகு சுவணபுரி செங்கீரை யாடி யருளே. [௬]

பாராட்டி யிருகண் மலர்த்துளி துடைத்து நற் பருமணித் தொட்டிலாட்டிப், பங்கயக் கண்ணு றங் காமைகண் டேந்திப் பணைத்தோளில் வைத்த ணைத்தே, யோராட்டி மெல்லென நடந்துலாத் திப் பொன் னிழைத்துநவ மணிகுயிற்றி, யிலகியிடு மஞ் சனச் சாலையிற் குங்கும வெழிற்கலவை தோய்ந்த விளவெந், நீராட்டி வெண்டுகி லெடுத்துமர கதமே னி நிறையுமீ ரம்புலர்த்தி, நிகழுச்சி மோந்தும்ப் சாந்திணொடு சாந்துகமழ் நெற்றியிற் பொட்டுமிட் டுச், சீராட்டி யன்னைகோ தாட்டெம் பிராட்டிவ ளர் செங்கீரை யாடியருளே, சிறையிலகு கிரணம யில் வருணமிகு சுவணபுரி செங்கீரை யாடியருளே.

ஆருடி யுறுதுகில் களைந்துசெம் பட்டுடுத் தஞ் சிலம் போலிடவிரைந், தாயிழை புனைந்திடும் பாங்கி யர்கள் சூழநின் னருகுவரு முன்னமதியங், கூருடி வைத்தவிரு கோட்டிளந் திங்களெழில் கொண்ட திரு நுதலின்மீது, குறுவியர் பொடிப்பத் துடித்துவ் வாய் புலரக் குர்றகம்ம விம்மவிம்மி, மாருடி யழு தகண்ணீரைத் துடைத்தன்னை மடிமீ தெடுத்துவை த்து, மார்புற வணைத்துறுத் திடுமென்று நன்முத்து மாலையை விலக்கவிளகிச்; சேருடு குங்குமக் கொங்

கையமு துண்டகிளி செங்கீரை யாடியருளே, சிறை யிலகு கிரணமயில் வருணமிகு சுவணபுரி செங்கீரை யாடியருளே. (ந)

கொங்கார் பசுந்தேன் றுளித்தித ழவிழ்த்தி டுங் கோகநக மலருமாவின், கொழுந்தளிரும் வென் றசெங் காந்தளங் கையினுற் குளிர்நிலவு பொழிசுரி முகச், சங்கேந்தி யேந்திள முலைப்பால் கறந்தன்னை தண்பவள விதழ்நெரித்துத், தங்கிநெடி யேறுது டிபயப்புகட்டியே தைவந்தெடுத்துமோந்து, கங்கா சலத்துவளர் கயல்பொருது நீண்டவிரு கண்மலரி னைற்றிமகிழக், கருதுகற் பகதருவின் வளரிளங் கொ ம்பெனக் காட்சிபெற வேவிளங்குஞ், செங்காவி யித ழியணி கங்காளர் பங்கிறைவி செங்கீரை யாடியரு ளே, சிறையிலகு கிரணமயில் வருணமிகு சுவணபுரி செங்கீரை யாடியருளே. (ச)

உவந்துள மிடங்கொண் டடங்கா மகிழ்ச்சியுட ேனாடரிக் கண்களிப்ப, வுச்சியிட் டயினிநீர் சுற்றிநீ றிட்டுவிட் டுன்னன்னை நிற்பமுன்னந், தவம்பெரிது செய்தநற் றுதைமக வான்முகந் தண்ணளி சுரந்து செந்தேன், றயங்குசெந் தாமரைப் பூவென மலர்ந் திடத் தாதியர்கள் பாதுகாப்ப, நிவந்தெழில் கனி ந்தநின் றிருமேனி மரகத நிறங்கொழித் துத்தளு ம்ப, நின்குமுத வாய்நில வரும்பவிழி பாவினிடை நீலமணி போல்விளங்கச், சிவந்தகை வருந்தத் தவ ழ்ந்துவிளை யாடுகிளி செங்கீரை யாடியருளே, சிறை

யிலகு கிரணமயில் வருணமிகு சுவணபுரி செங்கீரை யாடியருளே. (ரு)

வேறு.

தங்க மிழைத்திடு விரலவி ரணியொடு தகுதோள் வளையாடச், சரிகட கம்பவ ளங்கர வளைக டழைந்து தவழ்ந்தாடத், திங்க ளுதற்றில கத்தொடு முத்துச் சுட்டி சிறந்தாடத், திருமுக மீதணி வயிர மழுத்திய திகழ்சூழியமாடப், பொங்குச தங்கை சிலம்பொடு கிண்கிணி பொற்கொலு சொடுமாடப், புனைமணி மேகலை யரைஞா ணொடுமின் பொலிநூ லிடையாட, வங்கலும் மேனி பசேலென வொளிசெய வாடுக செங்கீரை, யருமைபடைத்திடு சுவண புரிக்கிளி யாடுக செங்கீரை. (சு)

குழுமிய கற்பக தருவினி லெழில்பெற மேவு கொழுந்தேசீர், குலவமு தப்பெரு வயலினி விளமுளை யான கரும்பேதே, ஞெழுக முறுக்கவி ழிதழ்செறி கமலநல் வாவி யரும்பேகூ, மூறுபிற விப்பிணி வினையை யொழிப்பவர் தேடு மருந்தேயீ, ரெழுபுவ னத்தினு மெழுதரும் வடிவுள தானு வணங்கேவா, னிமையவர் மற்றுள முனிவர் துதித்திசை பாட வருந்தேவே, வழகிய பொற்றிரு முகமினி தசைதர வாடுக செங்கீரை, யருமை படைத்திடு சுவண புரிக்கிளி யாடுக செங்கீரை. (எ)

கவினுறு மெல்விர லின்சுவை யுண்டுவண் கனியிதழ் புலராமே, கமல மலர்ந்திடு திருமுக மீதுற்

கண்ணீர் சொரியாமே, துவமுற விம்மிப் பொருமிப் பொருமியுன் றெண்டையுண் ணேவாமே, துடியி டை துவளுற வொருதா ளூன்றிச் சூழவருந்தாமே; நவமணி துயில்சிறு தொட்டி லுதைந்தடி நண்ணெ றில் கண்ணுடே, நல்லமு தந்திகழ் மார்புறவுந்தி நவிந்துரை யுண்ணுமே, யவனி செழித்திட வருள்புரி யிளமயி லாடுக செங்கீரை, யருமை படைத்திடு சுவண புரிக்கிளி யாடுக செங்கீரை. (அ)

வேறு.

சீருதரு நித்திய சுமங்கலி செங்கோ செங்கீரை
கடலமு திற்றெளி கனிமொழி செங்கோ செங்கீரை
திருவளர் முத்தி யருட்கொடி செங்கோ செங்கீரை
திகழ்தரு முத்தமி யம்பிகை செங்கோ செங்கீரை
யருவரை பெற்றவி ளம்பிடி செங்கோ செங்கீரை
யகிலம் வளர்த்த கருங்குயில் செங்கோ செங்கீரை
சுருதி படித்த விளங்கிளி செங்கோ செங்கீரை
சுவண மளித்திடு சுந்தரி செங்கோ செங்கீரை. (கூ)

பந்து கழங்கணி நங்காய் செங்கோ செங்கீரை
பண்கனி யுஞ்சிறு கொம்பே செங்கோ செங்கீரை
சந்தத முந்தொழ வந்தாய் செங்கோ செங்கீரை
சங்கணி யும்புயல் தங்காய் செங்கோ செங்கீரை
யிந்தெரளிரெந்தையோர்பங்காய்செங்கோசெங்கீரை
யென்றனை யும்பணிகொண்டாய்செங்கோசெங்கீரை
சிந்தை வளர்ந்த கரும்பே செங்கோ செங்கீரை
செம்பொ னளந்திடு வம்பிகை செங்கோ செங்கீரை.

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

௩-வது தாலப்பருவம்.

கடவா ரணங்க டிரிதரும் வெங் காடு மலையுங் கான்யாறுங், கலந்த சைய மால்வரையிற் காகங் கவிழ்ப்பக் குறுமுனிவ, னிடமாய்ப் பெருகிச் சோணாட்டி னெல்லை முழுதுந் தாய்முலைப்பா, லென்னப் பைங்கூழ் தமைவளர்த்தே யிலகும் பொன்னி வடகரையிற், குடவால் வளைகள் வயிறுளைந்து கொழித்த கொழுத்த கதிர்முத்தங், குழைந்து கறுத்த செழுஞ்சேற்றுக் குளிர்நீர் வண்ணப் பண்ணைவயன், மடைவாய்த் தவழுந் திருநாங்கை வாழ்வே தாலோ தாலேலோ வளரும் பசும்பொ னளந்திடுகண் மணியே தாலோ தாலேலோ. (க)

குடப்பால் சொரியுங் கருமேதி குமுத மேய்ந்து கோகநகக் குளிர்மெல் லரும்பை மென்றுயர்நீர்க் குளிரி யுழக்கி நாவளைத்துச், சுடர்ப்பூங் குவளை கறித்து வள்ளைத் துவைத்துக் குதட்டி நிழற்காஞ்சிச், சூழலுறங்க வுறங்காது துணைவர்ப் பிரிந்தார் போன்மறுகு, கடற்கோர் காத வழியுமணங் கமழும் பவளக் குலையுமர, கதம்போற் றிரண்ட பைங்காயுங் கவினு நெடிய செழுங்கமுகின், மடற்பூம் பாளை திகழ்நாங்கை வாழ்வே தாலோ தாலேலோ, வளரும் பசும்பொ னளந்திடுகண் மணியே தாலோ தாலேலோ. (உ)

பொன்னங் கமல மலர்வாவிப் புறஞ்சூழ் பெரிய கோட்டகத்துப், புதுநீர்ப் பாயப் புறம்பணையிற்

புகுந்தே நடுமின் னுழத்தியர்தஞ், சின்னஞ் சிறிய பேதையர்கள் சிறுவீ டமைத்து முத்தளந்துத், திகழ்வெண் சங்கினுலை யேற்றித் தேன்வார்த் தூரு மாஞ்மபிடித், துன்னும் வனப்பு வாய்ப்பவடுப் புயரக் கூட்டிச் செங்குமுத, வொளிர்மென் மலரை வைத்துநெருப் பூதி யூதி விளையாடும், மன்னும் புகழ்சேர் திருநாங்கை வாழ்வே தாலோ தாலேலோ, வளரும் பசும்பொன் னளந்திடு கண் மணியே தாலோ தாலேலோ. [ரு]

மூரிப் பகடு பூட்டியுழு முரட்கை யுழவர் செங்கரும்பை, முறித்தேர் நடத்தி யடித்தோட்ட முழுவெண் ணிலவு சொரிதரளஞ், சேரத் தெறித்துக் கரையெங்குந் திகழத் தவழ்ந்து சூலுளைந்துத், திரியுஞ் சங்கங் கருவுயிர்த்த திரண்மா மணியுங் கலந்துசெழும், போரிற் குவியக் கடைசியர்கள் புதுக்கள் ளினுக்குக் குடத்தளவாய்ப், பொழிய வளந்து கொடுப்பவவர் புறத்துப் போந்த சிறார்கள்முத்து; வாரிக் கொழிக்குந் திருநாங்கை வாழ்வே தாலோ தாலேலோ, வளரும் பசும்பொன் னளந்திடுகண் மணியே தாலோ தாலேலோ. [சா]

காலைப் பொழுதின் மலர்ந்தசெழுங் கமல முகமுங் கனிவாயுங், கதிர்வெண் டாளம் மணிநகையுங் கனகக் குழைநின் றசைந்தாடுங், கோலவள்ளைக் கொடிபோலக் குலவி யிலகும் வார்காதுங், கூர்வேல் விழியு மமுதமெனக் குளிர்ந்த மொழியும் புமு

கொழுகும், நீலக் குழலுந் திகழ்ந்தோங்க நிறைந்த திருப்பாற் கடற்பிறந்து, நிலவுஞ் செல்வப் பெருந் திருவை நெடிய தடமார் பிணிற்படைத்த, மாலுக் கிளையாய் திருநாங்கை வாழ்வே தாலோ தாலேலோ, வளரும் பசும்பொன் னளந்திடுகண் மணியே தாலோ தாலேலோ. (ரு)

வேறு.

பிழையைச் செயினுமெய் யடியர்க் கருள்புரி தாயே தாலேலோ, பெருகிப் புகழ்நிறை யிமைத் திறைசிறு பேதாய் தாலேலோ, விழையொத் தணி பெறு படிவத் துடியிடை மாதே தாலேலோ, விதயத் தினினீனை பவருக் கினிமைசெய் தேனே தாலேலோ, வழுதிக் கிருதிரு நயனத் தொளிமணி போல்வாய் தாலேலோ, மகிமைக் குலகினி னிகரொப் பிடவரி தாளுய் தாலேலோ, தழைசிந் திரமயி லெழின்மொய்த் திசையுறு பாவாய் தாலேலோ, தமிழுக்கிலகுபொன் னுருகித் தருகிளி மொழியாய் தாலேலோ. (சு)

வேறு.

திகழ்பார் துதித்திடு தென் மதுரா புரிக்காசி செழுநான் மறைத்தலைவி தாலேலோ, திகழ்கா விரிக்குவட கரைகோயில் பொற்புரிசை நெடுநாள் படைத்தவுமை தாலேலோ, புகழ்சே ரருட்டுறையி லவியா தெடுத்தடிமை புகும்வாழ் வளித்தகனி தா

லேலோ, மகிழ்கூர் தரச்சுவர்ணம் வருநாவலர்க்குத வி வளர்பாட லுற்றவுமை தாலேலேலோ. (எ)

வேறு.

கொங்கவிழ் பங்கய கிகர்சே றடியாய் தாலோ தாலேலேலோ, செர்ஞ்சு பசுங்கிளி யெழிலார் மொழி யாய்தாலோ தாலேலேலோ, திங்களணிந்த வனங்கலும் தேவீ தாலோ தாலேலேலோ, திகழ்பரை யாதிமு னு ருவிற் றிகழ்வாய் தாலோ தாலேலேலோ, சங்கொளிர் கரமலர் முகிலுக் கிளையாய் தாலோ தாலேலேலோ, சரம்சரமதொடெவ் வுலகு மளித்தாய் தாலோ தா லேலோ, வெங்கு நிறைந்திடு பரிபூரணியே தாலோ தாலேலேலோ, வின்ப மிகும்பர கதிவீடருள்வாய் தா லோ தாலேலேலோ. (அ)

அந்தியிளம் பிறை திகழ்வாணுதலாய் தாலோ தாலேலேலோ, வருள்பொழி வரிவிழிக்குயின்மொழி ய முதே தாலோ தாலேலேலோ, கொந்தவிழ் மலர்மணி யணியொளிர் குழலாய் தாலோ தாலேலேலோ, குன்றி ணை யைப்பொர வளரிள முலையாய் தாலோ தாலே லோ, சுந்தரர் செந்தமிழ் மகிழ்கா ரணியே தாலோ தாலேலேலோ, துன்று மருந்தவர் மனம்வா ழனமே தாலோ தாலேலேலோ, சந்தத முந்தொழ வருமா மணியே தாலோ தாலேலேலோ, தன்பொன் னளந்திடு கருணை நிதியே தாலோ தாலேலேலோ. [கூ]

வேறு.

பானேர் மொழிக்கனி வாயாய் தாலோ தாலேலேலோ பாவா றுதிப்பவர் வாழ்வே தாலோ தாலேலேலோ

தானே தனக்கிணை யானாய் தாலோ தாலேலோ
தாரார் குழற்சிறு பேதாய் தாலோ தாலேலோ
தேனார் மலர்ப்பத மாதே தாலோ தாலேலோ
சேவே றவற்கொரு தேவீ தாலோ தாலேலோ
வானா டருச்சிசெய் சீராய் தாலோ தாலேலோ
மாமா டளந்தரு டாயே தாலோ தாலேலோ. [௰]

தாலப்பருவம் முற்றிற்று.

௪-வது சப்பாணிப்பருவம்.

தேமருவு நாளவட் டந்திகழு முந்தியந் தேவுக்கு வைகுந்தமுந், தெண்ணீர் நிறைந்தமா னதவாவியாயிரத் தெட்டிதழ் முறுக்குடைந்து, காமரு பசுந்தேறல் கொப்புளித் திலகுபொற் கமலத்தி னிட்டைப்பூரியுங், கடவுட்கு வளர்சத்திய லோகமும் மாயிரங் கண்ணற்கு விண்ணுலகமும், பாமருவு மெண்ணரும் பலவண்ட கோளப் பரப்புமன் னுயிர்கட்கெலாம், பற்பல தனுக்கரண புவனபோ கங்களும் பரிவொடு படைத்ததெய்வத், தாமரைப் பூவொத்த செங்கைத் தலத்தினாற் சப்பாணி கொட்டியருளே, தன்னுளங் களிகூர்ந்து பொன்னளங் திடுவல்லி சப்பாணி கொட்டியருளே. [௧]

குமிழினாண் மலர்வெள்க முத்தணிந் திலகொளி கொழிக்குநா சிகையுமகரக், குழையசைந் தாடுகொடி வள்ளிவார் காதுங் குனித்தவிற் புருவ நுதலும்,

மழுதழு ழியகதிர் முருக்கிதழு முழுமதிய தாமென விளங்குமுகமு, மரிபரந் தகல்விழியு மெழில்பெறப் பவளவா யன்னநடை வாய்ந்துசெந்தேன், கமழு மல் லிகையார நிறையளக பாரங் கவின்செயச் செந்திருவெனக், கண்காட்சி பெறநின்ற பாண்டிமாதே வியிரு கண்மணிய தாய்வளர்ந்தே, தமிழுலா வியமது ரை மாநகர் புரந்தகிளி சப்பாணி கொட்டியருளே, தன்னுளங் களிகூர்ந்து பொன்னளந் திடுவல்வி சப்பாணி கொட்டியருளே. [௨]

நதிபரந் திடுதிரு முனைப்பாடி நாடாளு நரசிங்க முனையரென்னு, நாமவே லரசிளங் குமரனுக் கேற்ப வுன் னவனன்பு புரிசுதனெனக், கதிகொள்வாம் புரவிமத களிறேற்றம் விற்றொழில்கள் கற்றுமறை முற்றுணர்ந்து, காசினி புரக்குமுய ரரசர்திரு வும்பெருமை கவினும்வை திகதிருவும்வந், ததிக்வை போகநிறை மங்கள மணம்புரிய மணிமணக் காவணத்தி, லர்வணங் காட்டியென் னடிமையென் றேவழக்கதனில்வென் றையனுண்ட, ததியர்சுந் தரர்திருப் பாடல்கொண் டருள்செல்வி சப்பாணி கொட்டியருளே. தன்னுளங் களிகூர்ந்து பொன்னளந் திடுவல்வி சப்பாணி கொட்டியருளே. [௩]

பொய்கையின் புனன்மூழ்கி விளையாடு மருமறைப் புதல்வரிரு வரிலொருவனைப், போழ்வாய் திறந்தொரு கராவிழுங் கிப்பெரும் புனலிடை யொளிப்பநெடுநா, ளெய்தநீர் சுவறிப் பொருக்கெழுந்

திடும்வாவி யின்பெருங் கரையினின்றே, யிசைத்த பதி கத்தினுக் குருகிமழை சளசளென் றிமிழிசை கறங்கவூற்ற, வையகம் புகழவரு தெய்வவே தியர் முக மலர்ந்திட விலஞ்சிநிறைய, மருவுபுக் கொளியூ ரின் முதலைவாய்ப் பிள்ளையினை வருவித்த மகிமை யோங்குஞ், சய்வர்சுந் தரர்திருப் பாடல்கொண் டருள்செல்வி சப்பாணி கொட்டியருளே, தன்னு ளங் களிகூர்ந்து பொன்னளந் திடுவல்லி சப்பாணி கொட்டியருளே. (௬)

அமுதூறு மொளிரிளம் பிறைவேணி யண்ண லுறை யாலயந் தொழுதுபோற்றி, யன்பிற் கலந்து தரு சேரர்பெரு மான்பொரு ளனைத்துமுரு கன்பூ ண்டியிற், குமிழ்மலர்ச் செறியடவி யிற்பறி கொடுத் துளங் குறையுற்று மீண்டுபாடிக், கொள்ளையிடு பொ ருளெலா முள்ளபடி வாங்கிமுது குன்றினிற் பெற்ற பொருளை, யுமிழொளி மணிக்கலன் றுங்குமங் கை யர்கொங்கை யொளிர்குங் குமங்கரைத்தே, யோடு மா றதனிடை விடுத்துநல மோங்குமா ரூர்க்குளத் தினிலெடுக்குந், தமிழ்நாவ லூரன்வளர் பாடல்கொ ண் டருள்செல்வி சப்பாணி கொட்டியருளே, தன் னுளங் களிகூர்ந்து பொன்னளந் திடுவல்லி சப்பா ணி கொட்டியருளே. [௫]

செய்யதண் டளிர்விரவு செண்பகா டவிபெரு கு தேன்மாரி பொழிய வோங்குஞ், செந்நெலங்க ழனிமிகு கன்னலின் காடெனத் திகழ்தரப் புகழ்க

தித்துப், பையரவின் மணிமுடி சுமந்தபார் மீதி லுயர் பரிவுபெறு திருநாவலூர்ப், பதிவாழ வருமவ் வீறப் பொருளுணர்ந் தாகமப் பண்புறு கருத்துமு ற்றிப், பொய்கடிந் தந்தணர் குலத்தினி லுதித்துமெய்ப் பொருளினை விரும்பினனெனப், பொன்னுல கொளித்திருந் திலகுதிரு விளையாடல் பொற்புவி நடித்தருள்செயுஞ், சய்வநா யகர்மருவு துய்யகோ மளவல்லி சப்பாணி கொட்டியருளே, தன்னுளங் களிகூர்ந்து பொன்னளந் திடுவல்லி சப்பாணிகொ ட்டியருளே. [௬]

வேறு.

கட்டழல் பறக்கும்விழி நச்சர வணைத்துயில் கழித்துவளர் மெய்க்கருணையாற், கட்பொறி மகிட்சிபெறு பத்துரு வெடுத்துல கனைத்தையு மளித்த வனும்வாழ், நெட்டிதழ் மலர்க்கமல மட்டவிழ் பொகுட்டின்மிசை யிட்டடைசெய் மறைக்கடவுளு, நெற்றிவிழி பெற்றவர் மருத்துவர் வசுக்களொடு நித் திய தனுத்தலைவரும், விட்டொளி கொழிக்குநெடு வச்சிர மெடுத்திலகு வெற்பினிரு பக்கமரியும், வெ ற்றிகொள் மருத்துவனு முட்கிட வொளித்துவரும் வெட்கமொடு திக்கிலுலர, கொட்டமிடு துட்டவசு ரப்படை யடக்குகுயில் கொட்டியருள் சப்பாணி யே, கொற்றமிகு பொற்குவிய விட்டள வளக்குமயில் கொட்டியருள் சப்பாணியே. [௭

வேறு.

பொற்பர் கடைக்கணருள் வைத்தாளும் வெ ற்பரசி சப்பாணிகொட்டியருளே, புக்கேழ் கருக்

குழி யொழித்தே யெடுத்தகொடி சப்பாணி கொட்டியருளே, சொற்கோ கிலக்குரல் பழித்தே மிசைத்தலைவி சப்பாணி கொட்டியருளே, சுசார்க்காதி பற்பதவி பெற்றோர் துதித்தகனி சப்பாணி கொட்டியருளே, முற்றாத கற்பக தருப்போ லெழிற்கெள்கிளி சப்பாணி கொட்டியருளே, முத்தே வினைத்தரு துரைச்சீ புகழ்க்கிறைவி சப்பாணி கொட்டியருளே, தற்கா ரணச்சுவண மெய்ப்பேர் படைத்தவுமை சப்பாணி கொட்டியருளே, தக்கோர் மனக்கமல வக்கோயி லுற்றவொளி சப்பாணி கொட்டியருளே. (அ)

வேறு.

நடையெழில் கண்டன நின்று தொழுங்குயில் கொட்டுக சப்பாணி, நளினமடந்தை வணங்கு மடப்பிடி கொட்டுக சப்பாணி, வடவரை வந்து வளர்ந்த சவுந்தரி கொட்டுக சப்பாணி, மரகதம் வென்று விளங்கு திருந்தொளி கொட்டுக சப்பாணி, யிடைதுவ ளுஞ்சிறு மயிலென நின்றவள் கொட்டுக சப்பாணி, யிலகு பெருங்கணை யிணைகொள் கருங்கணி கொட்டுக சப்பாணி, குடைநிழ லிற்புவி முழுதும் வளர்த்தவள் கொட்டுக சப்பாணி, குல்வு பசும்பொ னளாந்த விளங்கிளி கொட்டுக சப்பாணி. [கூ

இணர்விரி பைந்தரு வனவளர் சுந்தரி கொட்டுக சப்பாணி, யிறைவ னிடந்தனி லுறையு மருள்பொருள் கொட்டுக சப்பாணி. மணமலி சண்பக மலரணி யம்பிகை கொட்டுக சப்பாணி, மகிமைதிகழ்ந்து தழைந்த பசுங்கொடி கொட்டுக சப்பா

தூணி, யணிகொள் முகுந்தன திளைய ளெனும்பிடி கொ
ட்டுகே சப்பாணி, யகில மகிழ்ந்திட வருசிறு பெண்
பிளை கொட்டுக சப்பாணி, குணநிறை யின்பம் விளை
ந்த நறுங்கனி கொட்டுக சப்பாணி, குலவு பசும்
பொ னளந்த விளங்கிளி கொட்டுக சப்பாணி. (ய)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

ரு-வது முத்தப்பருவம்.

உய்யும் படிநின் றிருவுள்ளத் தோங்கி யெழுந்த கருணையினு, லுலகம் பதினு லையும் படைத்தே யுயிர்கட் கினிய தனுகரண, துயய புவன போகங்கடோ ன்ற வமைத்து, மாமாயைத்; தோற்றவலிமை மெலிவிப்ப துனதி சத்தி யெனக்காட்ட, வைவர்தம் மைப் பெற்றெடுத்த வணங்கே துவாத சாந்தவெளி, யதனி னிறைந்த பேரொளியே யமுதே முத்திக் கொருவித்தே, தெய்வ வாசங் கமழ்குமுதச் செவ்வாய் முத்தந் தருகவே, செம்பொன் னளந்த பெருங்கருணைத் திருவே முத்தந் தருகவே. (க)

வாடிக் கமல மலர்கூம்ப மலருங் கதிர்வெண் மதிக்கொழுந்தை, மந்தா கினிபாயந் திடத்தழைந்து வளரும் பவளச் சடாடவியிற், சூடிப் பொதுவினடப்புரியுந் துணைவன் றனக்கோர் துணையாகித், தொல்லைப்புவனம் படைத்தளிப்பத் தோற்றுந் தூண்டா மணிவிளக்கே, யாடிப் பறந்து பறந்துபறந்தகிலம் பிளந்து வானேறி, யல்லும் பகலுங் கண்ணுங்கா தனேகங் கால மயன்முதலோர், தேடக் கிற

டையாச் சிவாநந்தத் தெளிவே முத்தந் தருகவே, செம்பொன் னளந்த பெருங்கருணைத் திருவே முத்தந் தருகவே. (உ)

மகிழு மலையந் தனிற் றிகழ்ந்து மதுர மொழுகுஞ் செழுந்தமிழை, வளர்க்குஞ் சங்க மிருந்தோங்கு மதுரைக் கரசே மனுநீதி, புகழு மகில மொருகுடைக்கீழ்ப் புரந்து தென்னன் புதல்வியெனப், புதுமை காட்டி விளையாடல் புரிந்தே யாலவாயமர்ந்து, நிகழுஞ் சோம சுந்தரற்கு நிறைய விருந்து பரிந்தவித்து, நெஞ்சம் பெருகிக் கனிந்துருகி நின்றவமுதே பசுங்கிளியே, திகழுங் கதிர்வெண் முத்தரும்புஞ் செவ்வாய் முத்தந் தருகவே, செம்பொன்னளந்த பெருங்கருணைத் திருவே முத்தந் தருகவே.

ஒளியே யொளிசூழ் மணிவிளக்கே யுலகம்பதினாலையும்படைத்த, வுமையே யிமையோர் மணிமவுலி யுரிஞ்சி யிடறிச் சிவந்தபதக், கிளியே பவளவாயனமே கிளருஞ் சோலைக் கருங்குயிலே, கிடக்கும் நிரைய சாகரத்துக் கீடாய்விழுந்து முழுகிமெலிந், தெளியேன் பிறவிக் குழியழுந்தா தெடுத்தாட்கொள்ளும் பெருங்கருணை, யியல்பா யிருக்கும் பராபரையே யிலகு மமுதே யின்னமுதின், றெளிவே தேனே தித்திக்குஞ் செவ்வாய் முத்தந் தருகவே; செம்பொன் னள்ந்த பெருங்கருணைத் திருவே முத்தந் தருகவே. [ச]

கிளைக்குங் கரும்பின் கணுச்சொரியுங் கிளர்வெண் முத்துங் கருங்கடலிற், கிடக்குஞ் சிப்பி யொளி

முத்துங் கேழன் மருப்பில் வருமுத்தும், மூளைக்கு
ம் பசிய வேய்முத்து முளரி முத்தும் வலம்புரியின்,
முத்துஞ் செங்நெற் கதிர்முத்து முத்த மெனப்பேர்
பெறுமெனினுந், துளைக்குங் கோக்கப் படும்விலை
யுஞ் சொல்லப் படுநீள் கடைத்தெருவிற், சொரி
ந்து கிடக்கப் படுமதனாற் சொல்லப்படுமோ முத்த
நிகர், திளைக்கு மேலாஞ் சிவாநந்தத் தெளிவே முத்
தந் தருகவே, செம்பொன் னளந்த பெருங்கருணைத்
திருவே முத்தந் தருகவே. [ரு]

ஆவா வென்று வானவர்க ளச்ச மீக்கொண்
டிப்பயமிட, வயிரா ணியும்பொன் னிதழ்க்கமல வங்
கை நெரிப்பக் கற்பகப்பூங், காவா முயிரா வதமுத
லெண் களிறு நடுங்க நெடுங்காலங், கண்ட முனிவர்
கண்முகிழ்ப்பக் காலத் தீக்கான் றிடுங்குலிசக், கோ
வோ டிடம்பார்த் திடச்சீற்றங் கொண்ட மகிடன்
கண்பிதுங்கக், குறைத்துத் தலையை மிதித்திடற்க்
குளிர்பொன் னுலகம் புரந்தளித்த, தேவே மூவர்ப்
பெற்றசிவக் கொழுந்தே முத்தந் தருகவே, செம்
பொன் னளந்த பெருங்கருணைத் திருவே முத்தந்
தருகவே. [சா]

வேறு.

இங்கட் கொழுந்தணிந் தொளிர்கின்ற செக்க
ர்த் திருச்சடா டவிமறைத்துத், திகழுமணி முடி
மீது வெண்ணூ லிழைப்பாகை செவ்விவாய்த் திட
வணிந்து, பைங்கட் பணிப்பெருங் கணம்விடுத் தொ
ளிபரந் திட்டமா ணிக்கம்வயிரம், பசியமர கதம்
வைத் திழைத்தபொற் கடகம் பரித்துத் திருச்செவி

தனிற், பொங்கித் திரட்சிபெறு முத்துக் கடுக்கன் புனைந்துபட் டாடை போர்த்துப், புலவரென வெளிவந்து நற்கீரர் முன்னின்று பொருதுபொற் கிழியறுத்துத், தங்கு தருமிக்குப் பொருட்டந்த வன்றேவி தருகதிரு வாய்முத்தமே, தண்பொன் னளந்துவளர் பண்கொண்ட பெண்பிள்ளை தருகதிரு வாய்முத்தமே. (எ)

புவனகோ டிகண்முன் படைத்தநான் முகனெனப் பொற்புமிகு சீலநிறையும், புங்கவன் மதங்கமுனி யிந்திரன் றிசையினிற் போந்தியா கம்புரிந்துச், சிவனையே டவிழுமென் மலரினா னற்சபரி செய்தெண்ண நிறைவேற்றிடத், திகழ்முனிவ ரெண்ணரிய யோகமார்க் கந்தனிற் சிந்தனை செலுத்திநிற்பக், கவனமேற் கொண்டன்ன பூரணியை யிதயகம லாசனந் தனிலிருத்திக், காயமுவின் வேதவிதி தவறாது வேள்விபுரி காத்தியா யனமுனிவருந், தவநிலா விய நாங்கை மாநகரம் வாழ்செல்வி தருகதிரு வாய்முத்தமே, தண்பொன் னளந்துவளர் பண்கொண்ட பெண்பிள்ளை தருகதிரு வாய்முத்தமே. [அ]

மிகுமின்ப மாப்பெருங் கதைநிறை பூராணமும் மேலான வாகமமுநா, விற்றமும் பேறப் படிக்துரை விரித்துண்மை மெய்யென்று நையுமனதி, னெகுமன்பு மேற்படர நித்தியநை மித்திகமு நெறியின்வழு வாதியற்றி, நிறைதிருப் பணிசெய்து மறையவர்க் ளசனமும் நியமம் புரிந்திருத்திப், புகுமன் பரைக்காணி லடிபணிந் தெதிர்நின்று புதியதண் ணமுதமொழுகும், புகழ்மொழிக ளாற்செவி நிறை

த்துமணி யுட்கொண்டு போந்தவர் கருத்தமைவு றத், தருமமன்ன தானஞ்செய் திருநாங்கை வாழ்செல்வி தருகதிரு வாய்முத்தமே, தண்பொன் னளந்துவளர் பண்கொண்ட பெண்பிள்ளை தருகதிரு வாய்முத்தமே. (கூ)

கவளமத யானைபுரி போர்த்தமுக் கட்பிரான் கைலையங் கிரிநிகர்ப்பக், கதிதரு சிவாலய மனேகமறை யவர்குழாங் கணக்கினி லடங்காதுநாற், றுவளுமிடை மாதர்தங் கற்பினுக் குவமையோ சொல்லரிய தியாகசாலைச், சூழுகித் தியாக்கினி வளர்ந்தே றும் வானஞ் சுரந்துமழை பொழியும்விரைசூழ்க், குவளையந் தாரணியும் வேளாளர் வாய்மையிற் குன்றார்க ணவதானியங், கொழிக்குமனு வேந்துசெங் கோலோங்கும் வாழுங் குபேரனள காபுரியெனத், தவளவொளி மாடநிறை சோழவள நாட்டரசி தருகதிரு வாய்முத்தமே, தண்பொன் னளந்துவளர் பண்கொண்ட பெண்பிள்ளை தருகதிரு வாய்முத்தமே.

முத்தப்பருவம் முற்றிற்று.

சு-வது வாரானைப்பருவம்.

சில்லரிப் பைம்பொற் சிலம்பொலி கலீரெனச் செய்யகிண் கிணிகிணினெனச், செம்மணிக் கொலுசுஞ் சதங்கையுங் கொஞ்சிவரு சிறுமழலை யெனவொலிப்பப், பல்லவ மருட்டுமின் பஞ்சின்மெல் லடியிணைப் படியிசை பெயர்த்தடியிடப், பைந்தூவி யன்னக் குழாத்தொடு மடப்பிடி பணிந்துநடை கற்கவ

ந்து, மெல்லமெல் லத்துடா வகிலாண்ட புவனத்தின் மேவிய சராசரத்தின், மென்குஞ்சி செம்பஞ்சினெண்குழம் பொழுகியிள வெயில்கொழித் திட்டிணைத்துச், சொல்லரிய பச்சைப் பசுங்கதிர் தழைந்திடுந் தோகைமா மயில்வருகவே, தொண்டர்பணிகின்றமணி கண்டரிட கின்றருளிசெய் சுவணநாயகி வருகவே. (௧)

தங்கவளை யங்கதங் கணையாழி கொத்துச் சரப்பளி பதக்கமிகைச், சந்திரப் பிறையினொடு சூரியப் பிறைமணி தயங்குசூ ழியம்விளங்கத்; திங்களணி நுதன்மீது கட்டுபொற் பட்டமுஞ் சிந்துரப் பொட்டெழுத்துஞ், செம்பவள மிடையிடை தொடுத்தணி செய் சுட்டியுந் திகழ்கதி ரெரிப்பநீண்ட, வங்கயற் கண்ணருள் பொழிந்திடப் புரிமுறுக் கவிழ்செழுந் தாமரைப்போ, தாமெனத் திருமுக மலர்ந்திட வசைந்தசைந் தாடுதா டங்கமின்னத், துங்கமணி மேகலை தழைந்தெழில் கொழிக்கவளர் தோகைமா மயில்வருகவே, தொண்டர்பணி கின்றமணி கண்டரிட கின்றருளிசெய் சுவணநா யகிவருகவே. (௨)

மாசுபசூழ் வினையொழித் திடவிறையு முக்குள மலர்ந்தவெண் காட்டின்மேற்பான், மார்க்கண்டர் பணிதிருக் கடவூரி னுக்குநேர் வடபுறங் காழிநகருக், கேயுமெதிர் தென்பாற் பகீரதி குளித்திட விலங்குமா யூரமென்னு, மெழினகர்க் கீசான மாகியே புள்ளூரி னுக்கங்கி திசையிவிலகும், பாயுமால் விடையண்ணல் பொன்னுக் கொளித்திடும் பரனேங்கு திருநாங்கையும், பதிதழைய வமுதமென விருகரை தொ

றும்பெருகு படர்புனல் வழிந்துபொழியுந், தூயகா வேரியுத் தரபாக மேவிவளர் தோகைமா மயில்வரு கவே, தொண்டர்பணி கின்றமணி கண்டரிட நின் றருளிசெய் சுவணநா யகிவருகவே. [ங]

௪. பணவரவ வல்குலர மகளிர்தெள் ளமுதொழு கு பண்கனிந் தேறிசைதனைப், பாடிமா டகயாழெ டுத்தின் னரம்புளர் பயிற்சியொ டுலாவிசிறப்பக், குண மருவு காமதே னுவுமருப் பொருநான்கு குலவுமயி ராவதமுநீட், குளிர்நிழலி னினிதிருந் திமையவர்கள வேந்தின் குறிப்பின்வழி நிற்பமன்னு, மணமலி பசு ந்தேன் சொரிந்துமிழ் பொங்கர்தொறு மஞ்சரி ம லர்ந்துதிகழ, வாமநிறை காமர்பூங் கொடிபடர்ந தெண்ணரிய வளநலங் காட்டியோங்கத், துணரிலகு பொற்புமிகு கற்பகச் சோலைவளர் தோகைமா மயி ல்வருகவே, தொண்டர்பணி கின்றமணி கண்டரிட நின்றருளிசெய் சுவணநா யகிவருகவே. [௪]

பாயிருட் படலங் கிழித்திலகு கொய்யுளைப் ப ச்சைப் பசுங்கலினவாம், பரித்தேர் கடாவியட ருத யகிரி நின்றெழும் பருதியங் கடவுட்குநற், சேயித ழ்க் குமுதமுகை விள்ளவெண் ணிலவுபொழி திங்க ளங் கடவுட்குநேர், செல்லவரி தாகிமிமிர் மாடமா ளிகைபல சிறந்திடு தலாற்சுருங்கை, வாயினுட் புகு துதற் கன்னலார் முகமதியு மாணிக்க வொண்குழை யுநீள், வளரொளி விரித்தலின் வெள்கிடும் நெடு வீதி மலிநாங்கை நகர்செழிப்பத், தூயமர கதவெ ழில் கொழித்துத் தழைழந்துநிறை தோகைமா மயில் வருகவே, தொண்டர்பணி கின்றமணி கண்டரிட நின்றருளிசெய் சுவணநா யகிவருகவே. [ரு]

வேறு.

கன்னல் கமுகி னெழில்காட்டிக் கணுவின் முத்
தஞ் சிதறமணங், கமழ்பூம் பாளை மடலவிழக் கனி
னுஞ் சிறுதேன் காலலைப்பச், செந்நெற் கதிர்க
ளசைந்தசைந்து செழும்பொற் கவரி வீசமகிழ், சிற
ந்து மருதம் வீற்றிருக்குந் தெளிநீர்ப் பழனத் தட
ம்பொய்கைப், பொன்னங்கமல மலர்ப்பொகுட்டிற்
புணருஞ் செங்கான் மடவன்னம், புலர்ந்து மலர்க்
கண் சிவந்தாடப் புலவி திருத்திக் கலந்தரச, வன்
னம்பயிலுந் திருநாங்கைக் கரசே வருகவருகவே, வ
ருள்கூர்ந் திருந்த சுவணபுரி யமுதே வருகவருகவே.

கஞ்சப் பொற்குட்டில் வாழ்திருவுங் கலைமா மக
ளு முடிபணியுங், கண்ணே யருமா தவர்தேடுங் க
னியே கணக்கி லாதவுயிர், நெஞ்சத் தறிவை மறை
க்குமிரு ணீங்கத் தோன்றாத் துணையாகி, நின்றஞா
னச் செழுஞ்சுடரே நினைவின் றெளிவே சிவக்கொ
ழுந்தே, வஞ்சிக்கொடியே மரகதமே வளருங் கரும்
பே மாணிக்க, மணியே மணிசூ ழொளிவிளக்கே
மருவும் வேத பஞ்சரம்வா, ழஞ்சொற் கிளியே யன்
னமே வணங்கே வருகவருகவே, வருள்கூர்ந் திருந்த
சுவணபுரி யமுதே வருகவருகவே. (எ)

துரியங் கடந்த பரநாதத் தொளியே யெளி
யேன் பெரும்பிறவிச், சுழனீர்க் கடனின் றேறவருந்
துணையே மடமா னிளம்பிணையே முருகு விரியப்
செந்தேறன் முளைகவின் டேற்றூவி தழவிழ்க்கு, மூள
ரிப் பொகுட்டில் வீற்றிருக்கு முதுமா மறைதேர்
சதுமுகனுங், கரியவிடங்கான் றனற்பிழிவெங் கான்

மூச் செறியும் பாம்பணைமேற், கமல மலர்க்கண் வளர்காவற் கடவுளென்னு மிருவருந்தே, டரியபொருளே திருநாங்கைக் கரசே வருகவருகவே, யருள்கூர்ந் திருந்த சுவணபுரி யமுதே வருகவருகவே. ()

நாதத் தலத்தின் முளைத்தெழுந்த நற்பூங்கொடியே கற்பகத்தி, னரும்பொற் றளிரே மரகதமே நாதங் கடந்த வநாதிமுத்தன், பாதித் தனுவில் வீற்றிருக்கும் பச்சைக்கிளியே மடமயிலே, பஞ்சாக்கரியே பராபரையே பரந்து கிடந்த பழவினையா, லேதைப் படும்பல் லுயிர்க்கெல்லா மிரங்கும் பரிபூரணமேபே, ரின்பக் கடலே பரஞ்சுடரே யெழுந்து திகழுஞ் சராசரங்கட், காதித் தனிக்கா ரணமேபெண் ணணங்கே வருகவருகவே, வருள்கூர்ந் திருந்த சுவணபுரி யமுதே வருகவருகவே. (கூ)

வேறு.

அடியர் கவலை யொழிய வருள்செய் யமுதம் வருகவருகவே, யளவில் பெருமை தழையு மலையினரசி வருகவருகவே, நெடிய கமல நயனி வருக நிமலி வருகவருகவே, நினையு மிதய கமல நிறையு நிதியம் வருகவருகவே, வடிவ மெழுத வரிய வொளியே வருக வருகவருகவே, வளரும் விளரி கனியு மினிய மதுர வசனி வருகவே, துடைகொ ளிடைமின் வருக வருக சுகிர்தி வருகவருகவே, தொகையில் கருணை பெருகி யொழுகு சுவணம் வருகவருகவே. (ம)

வாரானைப்பருவமுற்றிற்று.

எ-வது அம்புலிப்பருவம்.

தாரணியின் மீதிலகு வடிவமுத மாதலாற் றண்ணளி சுரந்திடுதலாற், றங்குபரி பூரணந் திகழ்தலாற் புகழ்தலாற் சாற்றுநன் மதியுடைமையாற், காரணர் தமக்குமிகர் கண்ணுகி நிற்றலாற் கருதரிய கலைநிறைதலாற், காரிரு ளகற்றலா லொருகுலந் தன்னிற் கவின்பெற வுதித்திடுதலாற், சீரணிந் திடுமுடுக் கணநடுவில் வைகியிடு திங்களெங் கடவுளெங்கள், செல்வக் குமாரிக்கு நிகரொத் திருந்தனை திருந்தியெழு தரியவரிய, வாரணப் பொருளான விகிலாண்ட வல்லியுட னம்புலி யாடவாவே, வன்னமென் னடைகொண்டு பொன்னளந் தவளோடு மம்புலீ யாடவாவே. (க)

உம்பர்தம் பெருமா னுவந்துநின் றனுவதனி லொருகூறு மருவநின்று, யுரிமைபெறு மன்பிற் கலந்தவர் தமக்குநல் லுளமிக மகிழ்ச்சிசெய்தாய், பம்பியிடு மீனக்கொடிப்பிடித் தாயுலகு பரவும்வேந் துரிமைபூண்டாய், பசிதீர நல்லமு தளித்துவந் தாய்செழும் பனிவரையின் மேற்றவிழ்ந்தாய், விம்பமர் மதியுனது செயலெல்லா மெங்களிட வேதநா யகிசெயலதாய், மேவியே நிகரொத் திருத்தலா னன்பனெனு மேன்மைபெற் றனையாதலா, லம்புவி நிறைந்திலகு வகிலாண்ட வல்லியுட னம்புலீ யாடவாவே, வன்னமென் னடைகொண்டு பொன்னளந் தவளோடு மம்புலீ யாடவாவே. [உ]

எண்ணிலா வுயிர்களுக் காதார மாகியே யிட்ங்கொடுத் திடுமென்றுநீ, யிலகிடுங் கீற்றிளம் பிறை

யாகி மேற்றிசையி லெழில்பெறத் தோற்றியினையத் தெண்ணிலா வொளிசெய்து விண்ணில்வாழ்ந் தனை யெங்கள் செல்விதிரு நுதலெழிலினைத், திருடினமை யாலதன் பின்னுநின் கள்ளந் தினந்தவிர் கிலாய்சிற ந்த, பெண்ணின்வாண் முகமேவு செவ்வியுங் கவா வே பெருகிமுழு மதியதாகிப், பேராசை கொள்ள நின் பகைவந்து மெள்ளப் பிடிக்கவா னுதவியிலதா, லண்ணலோர் பங்கிலுறை யகிலாண்ட வல்லியுட னம்புலீ யாடவாவே, யன்னமென் னடைகொண்டு பொன்னளந் தவளோடு மம்புலீ யாடவாவே. (௩)

சோதிமர கதமேனி பாசொளி விரிக்குந் துரை ப்பெண் வரைப்பெண்ணிவள், சூழ்திரு விழிக்கடை கொழித்திடு பெருங்கருணை சொல்லியள விடநிறை ந்த, வேதனு நான்கினு மடங்காத தாயதில் விளைந் தபுகழ் நெடுவெண்ணிலா, விண்முழுவ தும்பாந் தெ ண்ணில்பல புவனமும் விளக்கிநின் னிடமீதிலெட், பாதிதங் கின்தனைக் கொண்டுவெண் ணிலவுபொழி பண்புபெற் றனையாதலாற், பகுத்தறி தனக்கெள நினக்கொரு சுதந்தரம் பார்த்திடிற் காண்கிலேன் கா, ணதியோர் பங்கிலுறை யகிலாண்ட வல்லியுட னம்புலீ யாடவாவே, வன்னமென் னடைகொண்டு பொன்னளந் தவளோடு மம்புலீ யாடவாவே. [௪]

வருநவிள மையிலுடல் வெளுத்தனை வளைந்து கூன் வந்திடத் தேய்ந்தனையிவண், மரகத மணிக்கு மொரு மணியெனப் பச்செசன வளர்ந்தன டழைத் தனளுனைப்,, பெருங்குஷ்ய ரோகம் பிடித்திட விருந்த

ளை பெருந்திரு மகட்கரசிவட், பெயர்சொல்லி ஞு லா யிரத்துநா னூற்றின்மேற் பெருகுநோய் மூழு ளுமோடு, மூரியசோ டசகலை வளர்த்தனை யுரைக்கி லிவ ளுரைபெற்ற வறுபத்துநான், கொண்பொரு ணிறைந்தகலை யெங்கணும் வளர்ந்தன ளுனக்கதிய ளென்றுணர்கியா, லரியதிரு நாங்கைவள ரகிலாண்ட வல்லியுட னம்புலீ யாடவாவே, வன்னமென் னடை கொண்டு பொன்னளந் தவளோடு மம்புலீ யாட வாவே. [ரு

உமிழ்தன்மா மறிதிரைக் கடலாடை சூழ்ப வியி லொன்றினுக் கொன் றுதவியிவ், வுல்கநடை யி ல்பெனக் கலைமாப் பெருஞ்செல்வ ரோதுவது மு ணர்கிலைகொலோ, குமுதவிதழ் விள்ளவெண் ணில வுபொழி கின்றநிற் கூடப்பிறந்தகடுவுங், கோளர வின் வாயிருந் துணைவிழுங் கிப்பெருங் கோதென் றுமிழ்ந்திடுதலாற், றமிதனி னினக்குதவி கண்டிலே நீயந் தரத்திற் றிரிந்திடுதலாற், றரணிமுழு வதுநின் னை வெண்மதி யெனச்சொலுந் தகைமையான் மகி மைவரவே, வமுதவடி வாயிலகு மகிலாண்ட வல்லிய டனம்புலீயாடவாவே, வன்னமென் னடைகொண்டு பொன்னளந் தவளோடு மம்புலீ யாடவாவே. [சு

கடிமுகை யவிழ்ந்துசெந் தேனொழுகு கற்பகக் காவு மிமையவர்குழாமுங், காமதே னுவுமலர்க் கண் ணைக்கு மேவற் கடைப்பிடித் தாற்றிநிற்ப, வடிய சும் பொன்னுலக வாழ்வுதர வோசது மறைக்கட வுள் பதவிதரவோ, வைகுந்த நாடுதர வோபிறிதொ

வழிகிலே மண்ணெலாம் வாரியுண்ட, நெடியவன் முதந்தேவர் குறுகிநிற் கவுநோக்கி நின்னைவா வென்றழைத்தா, ணீயிழைத் திடுமருந் தவமம்ம வென்கொலோ நித்தமுங் கைத்தலமெடுத், தடிதொழுவெனமைப்பணிகொ ளகிலாண்ட வல்லியுட னம்புலீ யாடவாவே, வன்னமென் னடைகொண்டு பொன்னளந்தவளோடு மம்புலீ யாடவாவே. [எ]

திங்கள்வா ராயென் றழைத்துநீ தாழ்த்ததென் செப்புவா யென்றுகோபஞ், செனித்திடுமு னெடிநினது திருமுகத் திலகிவளர் செவ்விக் குடைந்தொதுங்கி, யிங்குவர வெட்கினன் போலுமென் றிவ்வாறெடுத்தனே கங்கள்காட்டி, யெங்கள்பெரு மாட்டியைப் பாராட்டி வைத்தே யிருந்தனமெ லுய்வதிலைகாண், பொங்குகடன் முழுதும் வெதும்பியிடில் வேறுமோர் புனறெளித் தாற்றவுண்டோ, புல்லறிவொழித்துநீ நல்லறிவு பெறுதியேற் புகலரிய சகலகலையா, றங்கமறை தேடரிய வகிலாண்ட வல்லியுட னம்புலீ யாடவாவே, வன்னமென் னடைகொண்டு பொன்னளந் தவளோடு மம்புலீ யாடவாவே. [அ]

பெருமைபெறு பொற்புசூழ் மூவர்தம் பாடலும் பெருகுநால் வேதவொலியும், பிரியாது பண்காட்டு வெண்காட்டின் மேவிவளர் பெரியநா யகியென்றுசீர், க்குரிய வாநந்த நிறைவா யிருந்தருள் கனிந்தொழுகு மேனிகாட்டிக், கண்ணகன் றிடுஞால முழுவது மளந்திடுங் கடல்வண்ணன் மார்பில்வளர் செல், திருமருவு செம்பதும வாவியுஞ் சோலையுந்

திகழ்காத் தியனிருப்புஞ், செம்பைதர னிருப்புமெ ழின் மன்னுமேனுங்கையுஞ் செய்யபட் டிடுவாட் கையு, மருமையிட வருபிறந் தநமென மகிழ்ந்தவண் மு னம்புலீ யாடவாவே, வன்னமென் னடைகொண் டு பொன்னளந் தவளோடு ம்புலீ யாடவாவே. (கூ)

வேறு.

நிசநிசங்குரு மணிதொடும்பவ நெடிதகன் றிடு ம்வருகவே, நிகழ்தருங்குறு முயலெனும் பிணி நினை விடும்விடும் வருகவே, வசைசொலுப்படி வளர்நல ங்குறை வதுவொழிந்திடும் வருகவே, பகிதலம்பிர வலனெனுஞ்சிறு மையுமறைந் திடும்வருகவே, தகை திலுங்கொடு மரவவெம்பகை தவிருமம்புலி வருக வே, தலைமைகொண்டிடு பெருவரப்பல தருவனம் புலி வருகவே, திசைநிறைந்திடு மிசைபரந்தொளி திகழவம்புலி வருகவே, செகதலம்புகழ் சுவணசுந் தரி திருமுகம்பெற வருகவே. (ய)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

அ-வது அம்மாவினைப் பருவம்.

சோதிச் செழுங்கற்றை நிலவுபொழி நித்தி லஞ் சூழ்ந்தவம் மனையும்வாய்ந்த, தூயசெம் பவ ளங் குயின்றவம் மனையுநின் சுந்தரக் கையிலேந்தித், தாதிக் கணஞ்சூழ்ந் திருப்பாடு பையந் தனிற்போந் திருந்தெடுத்துத், தகைமைபெற நீயாடு மகிலமையு ணிற் செழுந் தமிழ்நாங்கை நகரில் வாய்ந்தே

யேதப் படாததால் லெள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கணு நிறைந்திருந்தே, யெவ்வுலகு முய்யவ ருள் செய்யும் பெருங்கருணை யிலக்கீ யாட்டிவை க்க, வாதித்தன் வெண்மதியு மாடுமெழில் காட்டி யுள ரம்மானை யாடியருளே, யடியவர் தமனதுருக வருள்பெருகு சுவணபுரி யம்மானை யாடியருளே. ()

வண்டற் படிந்திலகு காவிரி நதிக்கரை மணற் புழுதி பாய்ந்தளைந்து, மருவுபெரு வீடுதரு மன்னை நீ திருவுள மகிழ்ந்துசிறு வீடுகட்டி, யெண்டிக்கி னும்பவள முத்துவயி ரேரிய மெடுத்துப் பரப்பியொ ளிசூழ்ந், திலகுமா ணிக்கநன் மணிவிளக் கேற்றி முத் தெழின்மணற் சோறமைத்தே, கண்டற் புது ப்பூஞ் செழுஞ்சோற்றி னொடுசெய்ய கமலவள் ளத் திவிட்டுக், கண்ணுன தாதிய ருடன்மரப் பாவைக் கருத்தியே நாங்கைநகர்சூழ்ந், தண்டப்பழங்கல மடு க்கிவிளை யாடுகிளி யம்மானை யாடியருளே; யடிய வர் தமனதுருக வருள்பெருகு சுவணபுரி யம்மா னை யாடியருளே. (உ)

வட்டமதி முகமீது குழல்வெயர் துளித்தாட வளர்முத்து வாளியாட, மகரகுண் டலமிலகு பரி திமண் டிலமென்ன வள்ளைவார் காதிலாட, நெட்டி தழ்க் குமுதமல ரனையசெவ் வாயினகை நிலவுதித் தாடவொளிரும், நெற்றியிற் கட்டுபொற் பட்ட மொடு பத்திநிறை நித்திலச் சுட்டியாட, கட்டழகு திகழுமோ கனமாலை யாடவிரு கைவளை கலின்கலி ன்னெனக், கல்விழைத் திடுகடக மாடமெல் விரலிலெ

கணையாழி யொளிசெய்தாட, வட்டிகை யசைந்தா ட வம்பொன்முணி முடியாட வம்மானை யாடியருளே, யடியவர்த மனதுருக வருள்பெருகு சுவணபுரி யம்மானை யாடியருளே. (கூ)

பிள்ளைச் சுரும்பின முரன் றாதி யாடியிசை பெருகுசெவ் வழியெடுத்துப், பின்னற் கருங்குழற் காட்டிளுண் மலரிற் பெருந்தே னுகர்ந்துபின்னுங், கொள்ளைக் குவந்துமேற் கூட்டமிடு வதுபோற் குழாங் கொண் டிரைந்தெழும்பக், கோலமிகு சிந்துரப் பொட்டிட்ட சிறுநுதற் குறுவெயர் துளித்தரும்பத், துள்ளிப் பெருங்கருணை வெள்ளத்தின் விளையாடு துணைவிழிக் கயல்பாயநின், சுந்தரத் திருமுக மலர்ந் துமேனோக்கியே தூயவா னவாருந்த, வள்ளித் திரட்டமுத மென்னவொளிர் மணிமுத்தி னம்மானை யாடியருளே, யடியவர்த மனதுருக வருள்பெருகு சுவணபுரி யம்மானை யாடியருளே. (சு)

பொட்டிட்ட சிறுநுதற் பாங்கியரின் முளரிப் பொகுட்டிலுறை திருமகள்செழும், பொன்னிழைத் தொளிர்மணி குயிற்றிநின் கையினிற் போங்காடு மம்மனைதனி, லெட்டிப் பிடித்திட வகப்படா ததுகண் டிருந்தசே டியர்கைபுடைத், தெழுந்துநகை செய்யநின் கனிவாயி னுஞ்சிறி திலங்குகுறு நகையரும்பக், கட்டிட்ட செஞ்சடைக் காட்டெம் பிரான்முதற் கடவுளர்தம் வயிறுநிறையக், கணக்கில்பல் லாயிரத் தண்டகோ டிகளுண்டு களைதீர வென்சொல்லுகே, னட்டிட்டு மிருநாழி நெல்வளர வளரம்ம

யம்மானை யாடியருளே, யடியவர்த மனதுருக வரு
ள்பெருகு சுவணபுரி யம்மானை யாடியருளே. [௫]

கங்குலி னிருண்டுபொற் ரேட்டுநறு மணம்வீ
சு கற்பகத் தெரியல்வேய்ந்த, கற்றைவார் கூந்தலயி
ராணியும் பகர்தேவ கன்னியரு முகையவிழ்ந்த, பங்
கயத் திருமா ளிகைக்குளினி துறைகின்ற பாமகளு
மெழில்பெறுதிருப், பாற்கடல் வயிற்றிற் பிறந்தவ
ளு மிவர்முதற் பாங்கியர்கள் சூழ்ந்துநிற்க, செங்
கைத் தலத்தினல் வாரிவளர் மண்ணுண்ட செப்ப
வள வாய்சுவைத்துத், திரட்டியிடும் வெண்ணெயெ
ன்றெண்ணிவை குந்தத் திருந்தவ னெழுந்துபார்
க்க, வங்கயற் கண்ணமுத மேபொங்கு வெண்முத்தி
னம்மானை யாடியருளே, யடியவர்த மனதுருக வரு
ள்பெருகு சுவணபுரி யம்மானை யாடியருளே. (௬)

பாணிக்குண் மழுவேந்து மையர்திரு விளையா
டல் பாவித் தொளித்திருக்கப், பார்த்துமுகம் வேர்
த்துப் பெயர்த்தே யெடுப்பவிரு பாதமிக வுந்துவ
ண்டு, நாணித் தளர்ந்துவரு நடைகண்டு மதமொ
ழுகு நால்வாய்த் தடக்கை யோங்கும், நற்குஞ்ச
ரத்திரு முகப்பிள்ளை கைகாட்ட நன்முறுவ லுள்ள
டக்கி, வாணிக் குயிற்கிறைவ னாகிவளர் குரவனென
மறையோது வாய்மலர்ந்து, மதுரத் தமிழ்ப்பாடி
யெதிர்நின்ற சுந்தரர் மகிழ்ச்சிபெற வாரிவாரி, யா
ணிப் பசும்பொனிடு மங்கைத்தலத்தின லம்மானை
யாடியருளே, யடியவர்த மனதுருக வருள்பெருகு
சுவணபுரி யம்மானை யாடியருளே. [எ]

வேறு.

சொரிபமு தந்திக ழிசைபயி லுங்குயி லாடுக வம்மனையே, சுருதி பயின்றிடு பருவ விளங்கிளி யாடுக வம்மனையே, பரிவுறு சிந்தையி னினிதுறை யம்பிகை யாடுக வம்மனையே, படிமுழு துய்ந்திட வருசிறு பெண்பிள்ளை யாடுக வம்மனையே, மருவி வளர்ந்திடு மகிமைநிறைந்தவ ளாடுக வம்மனையே, மதுரம் விளைந்திடு மதுவொழு குங்கனி யாடுக வம்மனையே, யரிபிர மன்பணி பரிபுர சுந்தரி யாடுக வம்மனையே, யருமை புரிந்திடு சுவண மலர்ந்தவ ளாடுக வம்மனையே. [அ]

கதிதரு மம்புப சரணி சுதந்தரி யாடுக வம்மனையே, கருதெழில் பொங்குபொன் மலைவளருங் கொடி யாடுக வம்மனையே, பெதிர்பொரு வெஞ்சின மபிடனை வென்றவ ளாடுக வம்மனையே, யிறைவ னிடந்தனி லிலகு பசும்பிடி யாடுக வம்மனையே, துதிசெய் தெழுந்திமை யவர்பணி யும்பரை யாடுக வம்மனையே, துபர மொழிந்தக மகிழ்பெற வந்தவ ளாடுக வம்மனையே, யதிக சவுந்தரி சதுரி நிரந்தரி யாடுக வம்மனையே, யருமை புரிந்துயர் சுவ்ண மலர்ந்தவ ளாடுக வம்மனையே. [கூ]

திகழ்கொடி வென்று துவண்டிடு மின்னிடை யம்மனை யாடுகவே, திருமகள் வந்து பணிந்திடு நன்மணி யம்மனை யாடுகவே, நகுமெழில் பொங்கிவிழிந்

திடு மொண்ணுத லம்மனை யாடுகவே, நளின மிருந்தும் விளங்கிடு தண்மது வம்மனை யாடுகவே, மகிதல மெங்கு நிறைந்திடு மின்னமு தம்மனை யாடுகவே, மருவிய வின்பம் விளைந்திடு சின்மய வம்மனை யாடுகவே, வகில மொருங்கு புரந்திடு பெண்ணமு தம்மனை யாடுகவே, யரிய பசும்பொ னளந்திடு கண்மணி யம்மனை யாடுகவே. (௰)

அம்மானைப்பருவம் முற்றிற்று.

௯-வது நீராடற்பருவம்.

வள்ளிதழ்க் குமுதநாண் மலர்மலர்ந் தென்னநின் மணிவாயி னொளிவெளிறவால், வளையினொடு சூல்வளை யொலித்திடக் கழுநீர் மலர்ந்தெனக் கண்சிவப்பப், புள்ளிரைத் தலமரப் பொங்கிப் பரந்தலை புரட்டிச் சுழித்தெழுந்து, புதுநறுஞ் சுதைசெய மதகெங்கணுஞ் சாலப் புகுந்துகால் வாயிலோடி, யள்ளிலைத் தேமா நறுங்கனி பலாச்சுளை யரம்பையங் கனிநூற்றுதே, ஊறுபா யப்புதுப் புனல்பெருகு காவிரியி னணிநெடுங் கரைகடோறும், வெள்ளிதழ் விரித்திலங்கு மிளமரக் காநிழல்செய் வெள்ளநீ ராடியருளே, வெள்ளைமால் விடையேறும் வள்ளல்பாலுறைசுவணம் வெள்ளநீ ராடியருளே. (௧)

கண்சிறு கருங்கய லெனக்கய றுடார்ந்திடக் கால்கண் டிளஞ்சினைவராற், கணமோடி வரினத்து

புறவடியி னெழில்கண்டு கமடமேக் குற்றுயிர்ப்ப, வொண்சிறு முகச்சங்கு பொங்குமங் கலநா ணுறுங் கழுத் தினைநோக்கிவந், துள்ளம் புழுங்கியே யோல மிட் டிரையகின் ஞெளிர்முழந் தாளினைப்பார்த், தெண்சிறு கிடாதெண்ணி யெண்ணியல• வன்றிரிந் விலகுசெந் தேன்பெருக்கா, றெடுத்துவரு வதுபோ ற்பரந்துவரு காவிரியி னிருகரை தொறுங்கொழி த்த, வெண்சிறு மணற்குன்றி லினிதுவிளை யாடுகிளி வெள்ளநீ ராடியருளே, வெள்ளைமால் விடையேறும் வள்ளல்பா லுறைசுவண்ணம் வெள்ளநீ ராடியருளே.()

தெள்ளுநால் வேதச் சிலம்பொலி யலம்பிடத் திகழ்நடஞ் செய்யுமுக்கட், செல்வன்மண வாளத் திருக்கோல மங்களந் தெரிசனஞ் செயவிழைந்தே யள்ளியணி நீற்றினெளி வெண்ணிலவு பொழியவ றை யருமுனி யகத்தியன்மீண், டளவில்வள நிறை சைய மால்வரைப் பாங்கர்செலு மவ்வேலை குண் டிகைதனிற், றுள்ளுபா கீரதி கருங்கொடி கவிழ்ப் பவான் றேயமுத வருவிபார்மேற், சூழ்வது நிகர்ப் பவதி வேகமொடு நற்பசுஞ் சுண்ணந் திமிர்ந்துபொ ங்க, விளுநாண் மலர்கமழ வோடிவரு கின்றபுது வெள்ளநீ ராடியருளே, வெள்ளைமால் விடையேறும் வள்ளல்பா லுறைசுவணம் வெள்ளநீ ராடியருளே.

உண்டிடைகொ வில்லைகொ லெனத்துவளு நு ண்மருங் குறுகொடிச் சியரும்வில்லேற, றுழல்கின்ற கானவரும் வாய்வெரீஇக் கண்சிமிட் டுற்றுள நடுங் கிநிற்ப, மண்டிணி கிடந்திடுங் கந்தடுஞ் சீற்றமும்

மதவேழ ம்ர்மருப்பும், வான்றொட விமிர்ந்தாடு பை ங்கழையி னுடன்மலையில் வளர்செங் கரும்பின்வாய் த்த,கண்டிரணன் முத்தமொடு கோழரைக் குங்குமக் காழ்படுங் குவடும்வாசங், கமழ்நறுஞ் செஞ்சந் தன த்திரளு நீள்பெருங் கரைதொறும் வைத்தரைத்து, வெண்டிரை கொழித்துச் சுழித்தோடி வருபொன்னி வெள்ளநீ ராடியருளே, வெள்ளைமால் விடையேறும் வள்ளல்பா லுறைசுவணம் வெள்ளநீ ராடியருளே.()

தாவியுஞ் சிறையளி கொழுந்தே னிறைந்து மேற் றவழ்நறும் போதுகமழுந், தாழ்குழற் காட் டிற் படிந்தூதி நற்பசுந் தாதுக டிமிர்ந்துதுடரப், பூவின்மெல் லியலிணைச் சிற்றடி வருந்தப் பொருது மெல் லெனநடந்து, போந்திலக வும்பொழிற் சீதள நிழற்செயும் புனைநெடுங் கரையிலேறித், தூவியிள வன்னக் குழாமெனச் சூழ்ந்திடுந் தோழிய ருடன்கா விரித், துளிதூங்கு தண்ணந் குறுந்திவலை பொங்கத் துணைச்சிலம் பொலிகலிப்ப, மேவுபே ரானந்த வெ ள்ளவடி வானகிளி வெள்ளநீ ராடியருளே, வெள்ளை மால் விடையேறும் வள்ளல்பா லுறைசுவணம் வெ ள்ளநீ ராடியருளே. (ரு)

தலையாடு கந்தடுங் கழைசுளிப் புகர்முகத் தறு கட் கடாக்களிற்றந், தந்திநிக ரேந்திளங் கொங்கை திகழ் மங்கையர்க டனிலுயிர்த் தோழியர்கடங், கி ளையாடு பைங்கழைத் தோள்கொட்டி யாடக் கிளர் ந்துவரி யளியேழிசைக், கீதங்கள் பாடவொளி ரஞ்

சனந் தீட்டியிடு கெண்டையங் கண்களாட, வளையாட வச்சிரக் கொப்பாட மேகலை மருங்குற் குறிங்கியாட, வள்ளைவார் காதின்மணி மகரகுண் டலமாட வருகா விரிப்புளினமேல், விளையாடி நின்றிடும் பச்சைப் பசுங்கிள்ளை வெள்ளநீ ராடியருளே, வெள்ளைமால் விடையேறும் வள்ளல்பா லுறைசுவணம் வெள்ளநீ ராடியருளே. [சா]

வேறு.

கங்குற் பருகி யோங்குசுடர்க் கடவுளுதிக்கும் பெரியகருங், கடலின் வயிறு கிழியவிரு கரைபினேறி யெழுந்துசெழுஞ், செங்குங் குமத்தின் வேர்கழ்ந்து, திகழு நெடிய மராமரங்கள், சேர முறித்துக் காடுபடுஞ் செல்வமுழுதுஞ் சூறையிட்டுக், கொங்கிற் பொலிந்த நறுமலருங் குடவால் வளையுங்கரிமருப்புங், குளிர்வெண் ணிலவு சொரிதரளக் குவையும் புளினந் தொறுமொதுக்கிப், பொங்கிப் பரந்து சுழித்தோடும் புதுநீ ராடி யருளுகவே, பொழிபொன்னளந்தவிளங் கிளியே புதுநீ ராடியருளுகவே. ()

சூழ்ந்து மருத மகளிர்விரை தோய்குங் குமமு மான்மதமுந், தொடுத்த மலரு நறுஞ்சாந்துஞ் சுடர்ப்பூங் கரத்தி லேந்தியிட்டுத், தாழ்ந்து வணங்கி யிருமருங்குஞ் சார்ந்து மூழ்கி யெழுந்தொழுத், தகுங்கிதய லங்க டமைத்தொழுது தளிர்க்கைக் கூப்பிச் சுழித்தோடி, யாழ்ந்து குடக்கின் றடங்கிரியி னதிசீ தளப்பூஞ் சுனைகடொறு, மருவி பெருகிக் கான்யாற்றி னடர்ந்து மோதிப் பிருப்பதத்தைப், பொ

ழ்ந்து விரைந்து வரும்பொன்னிப் புதுநீ ராடி யருளு
கவே, பொழிபொன் னளந்த விளங்கிளியே புதுநீ
ராட் யருளுகவே. (அ)

வேறு.

வழிந்தழ கொழுகிய கண்ணிணை கண்டு வரு
ந்திய லோடவொளிர், மதிவளர் திருமுக முன்னி
நறுந்தா மரைநீ ருட்புகுத, மொழிந்திடு செவ்வி
தழ் வாயெதிர் குமுத முகங்குவி யக்குளிர்வெண்,
முத்துறை சங்கு களந்தனை யுற்று முகஞ்சுரி யப்ப
னிலீர்ச், செழும்புழு கிலகு குழம்பு நிறைந்திடு சிவி
றி பெடுத்தெதிர்நின், சேடியர் மீதி லெறிந்து வளை
ந்தொரு சிறுபுன் னகைசெய்தே, பொழிந்து விரை
ந்து பரந்து சுழித்தெழு புதுநீ ராடுகவே, பொரு
வில் வளம்பெறு சுவண விளங்கிளி புதுநீ ராடுகவே.

குனிசிலை வென்றொரு கலைமதி யென்னக் கூறு
வெயர் கொண்டநுதற், கொடியிடை பொற்சிற கன
நடை யங்கலும் குலமயி லியன்மேவிக், கனியுறு
பண்புகொ டோழியர் சூழக் கலவைச் சேறுடிக்
கவின்வளர் மான்மத விழுதள வித்திகழ் கந்தங்கம
ழ்நீரி, னினிதுற நிறையரி சனமணம் வீச வெழுந்
து குடைந்துகுடைந், திலகிய கரிய நறுங்குழல் கை
வல மெனவலை மிசைதாவப், புனித மிகுஞ்சுர நதிநி
கர் பொன்னிப் புதுநீ ராடுகவே, பொருவில் வளம்
பெறு சுவண விளங்கிளி புதுநீ ராடுகவே. [ம]

நீராடற்பருவம் முற்றிற்று.

௰-வது ஊசற்பருவம்.

ஓங்கிநிமிர் வான்முக டளந்தண்ட கோளமே லுயர்சித்திர மணிமண்டபத், தொளிநிலாத் தவழ்த ருஞ் சந்திரகாந் தத்தக டொதுக்கிநேர்ந் தொப்பமி ட்டுப், பாங்குபெறு தலமிசைப் பாசொளிய மரகத ப் பருமணிக் காணிறுத்திப், பவளநெடு விட்டத் திட்டபொற்கொலுசினிற் பசுங்கதிர்த்திலந்தொடுத் தாங்குமொழு கொளிவடம் பூட்டிமா ணிக்கத் த ம்புசுடர் விடுபலகைமேற்; றற்பரா பரைமுதற் ச த்தியே நற்சேவை தரவினி திருந்துவாசப், பூங்க வாவிநிறை நாங்கைநகர் வாழ்செல்வி பொன்னூ லாடியருளே, பொன்னளந் திடுகருணை யின்னிளம் பிடிமன்னு பொன்னூச லாடியருளே. (௧)

முத்தமிடு பச்சைப் பசுங்கிளி யசைந்தாட முகி ழ்முத்து மாலையாட, முளரிநாண் மலர்பிடித் திடுகர நிமிர்ந்தாட முறுவல்வெண் ணிலவுமாட, கொத்த லகு கற்பகத் தெரியல்சூழ் கரியமென் கூந்தல்செறி பின்னலாட, குலவுகுளி ரமுதமதி முகமண்ட லந் தனிற் குறுவெயர்வை யாடநீடு, சத்திவடி வாய்ச் சகல புவனகோ டிகளுந் தனித்தனி படைத்தளித் துச் சதுமுகப் பிரமன்முத லனைவருக்கும்பெருந் தா யாகி வந்துபரிவாற், புத்தியுஞ் சித்தியும் முத்தியுந் தருசெல்வி பொன்னூச லாடியருளே, பொன்னந ளந் திடுகருணை யின்னிளம்பிடிமன்னு பொன்னூச லாடியருளே. (௨)

அரிபரந் தஞ்சனந் தீட்டுமயில் விழியாட வணி மகர குழையுமாட, வம்பொற் பதக்கமோ கனமாலை

யாடவளை யாடவட் டிகையாடநற், பரிபுர மசைந்
தாட நவமணி யிழைத்திடும் பாடகந் தண்டையாட,
மாதகின் கிணியாட நெற்றியிற் கட்டுபொற் பட்ட
மொடு சுட்டியாட, வரியளி துதைந்தாட விளரிவண்
டோலமிட வரிசுரும் பிசைதொடுப்ப, வான்மிசை
யறந்துபண் பாடிஞிமி றலம்வர மதுச்சொரிய விரை
நறுழ்ந்தும் புரிமுறுக் கவிழுநாண் மலர்தொடுத் தில
தயிடு பொன்னூச லாடியருளே, பொன்னளந் திடு
முநணை யின்னிளம் பிடிமன்னு பொன்னூச லாடி
யருளே. (௫)

குருமணி பதித்துநிறை சூழியக் கொண்டை
யுங் குளிருச்சி வாளிமுத்துங், கொப்பிட்ட காதில
விர் நவமணிக் குழைகளுங் கோட்டிளந் திங்களுத
வும். வருபெருங் கருணைபொழி திருமுகமும் வெ
ன்னையு மங்கள நிறைந்தவடிவு, மன்றலந் தெரி
யலுஞ் செய்யபட் டாடையும் வணங்குகொடி யிடை
யுமகிழ்கூர், சுரபதியு மிக்கசுர பதியுநான் முகனுமே
நகைமுடி வணங்குபதமும், நாடொறுந் திகழணி
நலம்பெற விளங்கவளர் நாதநா தாந்தமென்னும்,
பொருவரிய பெருவெளியி லிலகுபே ரொளிமன்னு
பொன்னூச லாடியருளே, பொன்னளந் திடுகருணை
யின்னிளம் பிடிமன்னு பொன்னூச லாடியருளே (௬)

திருந்துசெந் தேன்றுளித் திலகுகற் பகநறுந்
தரிபல்சூழ், கரியகூந்தற், சிற்றிடைப் பேரல்கு
லாரணி யுந்துய்ய செவ்வரி பரந்துநீண்ட கருந்த
டங் கட்பெருந் திருமகளும் வளர்செழுங் கலைமகளு
மெழுந்துகொடி போல், கவினெழுகு யிரதியும் பாணு

ன் கினும்கின்று காந்தளங் கைகணீட்டி, பரிந்துதிக ழொளிமணி வடம்பிடித் தாட்டவுயர் பரநாத மூல த்தவப், பருவூனையி லோங்கியெழு மூழுமுதல்வி யே மகளிர் பல்லாண்டு கூறிமகிழப், பொருந்துநவ மணிக் கதிர் விரித்தெழில் கொழித்திடும் பொன்னூசலாடி யருளே, பொன்னளக் கிடுகருணை யின்னிளம் பிடிம ன்னு பொன்னூச லாடியருளே. (ரு)

கோத்தகதிர் மேகலை தயங்குமின் னிடைகருங் குவளைவிழி பவளவிதழ்செங், குமுதவா யமுதமொழி பச்சிளங் கழையெனக் குலவுதோ ளிணைசிறந்து, வா த்தகன் னியரெழுவ ருங்குழுமி நிற்பவொளி மணி யிட, றசைந்துபாடி, வந்துகாத் திருவரும் மாடக முறுக்கியே மகரயாழ் மாரிபொழியப், பாத்தும்விளி செய்துந் தழீஇக்கொண் டுதைந்துமின் பாங்கியர் குழாங்குழுமலிற், பண்பா டளிக்குல மிதிப்ப மது நுகரப் பறந்துநறு மணமலிந்து, பூத்தமல ரின்செ ழூந் தாதுக ணிறைப்பவளர் பொன்னூச லாடியரு ளே. பொன்னளக் கிடுகருணை யின்னிளம் பிடிமன்னு பொன்னூச லாடியருளே. (சு)

செழியர்குல மகளாகி முடிசூடி யழல்விழச் சிங் கஞ் சுமந்தபீடத், தினிலிருந் தரசுரிமை செய்து நெறி கோடாது செங்கோல் செலுத்திவந்து, சுழி கொள்வாம் புரவிக் கொடிஞ்சியந் தேரூர்ந்து சூழு மெண் டிசைசெயித்துச், சுந்தரக் கடவுண்மங் கல மணந் தனிலினிய சுவைகிறை விருந்தளித்து, வழி தொறுங் குழுமுநெடு வரைவளர்க் தருணிதிய மழி திமைக் கையிலேந்தி, மாறுது புனல்பெருகி மன்னி

வருகாவேரி வள்ளலென வாரிவாரிப், பொழியும் வடகரைப்பெருங் கோயில்கொண் டருள்செல்வி பொன்னூச லாடியருளே, பொன்னளக் கிடுகருணை யின்னிளம் பிடிமன்னு பொன்னூசலாடியருளே. (எ)

மேகபட லங்கிழித் தமுதகிர ணந்தவழும் வெண்மதியி னுடலுரிஞ்சி, விரைகமழு நறுமலர்த் தாம நாற் றித்தென்றல் வீசுசா ளரம்விளங்க, பாசம் மிசையோங்கு மாமேரு வெனநின்ற மாடமா ளிகைகடோறும், வளர்தோகை மாமயில்க ளென்னநல் லார்கணட மாடுமணி மறுகுமொருபா, லாகமபுராணசாத் திரவிசா ரணைசெய்யு மன்பருறை மடமு மொருபா, லரியபொரு ளிறையுநால்வேதபா ராயண வருந்தவ ரிடங்களொருபால், போகபூ மியினிலகு திருநாங்கை வாழ்செல்வி பொன்னூசலாடியருளே, பொன்னளந் திடுகருணை யின்னிளம் பிடிமன்னு பொன்னூச லாடியருளே. [அ]

மகிழ்கோங்கு செண்பக மணங்கமழ் செருந்திமா மாலூர நாகநெல்லி, மந்தார மஞ்சரி தயங்கிதழ் வன்னிமுன் வயங்குபூஞ் சோலைமல்கித், திகழோங்கு வானுடர் கற்பகத் தருவொடு செறிந்துபைந் தளிர்மென்மலர்த், தீங்கனி முதற்பல வழங்கலா னுந்துகிர் செய்யவாய் கரியகூந்தன், முகிருங்கு மின்னனையர் நான்னாளுமவருக்கும் முத்தவெண் முறுவறிம்பான், முக்கனிக ளப்பமோ டருத்தலா னுந்திருவி னுனுநல் திருவினானும், புகழ்தாங்கு திருநாங்கை நகரோங்கி வாழ்செல்வி பொன்னூச லாடியருளே, பொன்னளந் திடுகருணை யின்னிளம் பிடிமன்னு பொன்னூச லாடியருளே. [கூ]